# சித்திரபுத்திரன் விவாதங்கள்

## பெரியார்

வெளியீடு:

பெரியார் திராவிடர் கழகம்
29, இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்
சென்னை – 600 041
periyarmulakkam@yahoo.com

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சித்திரபுத்திரன் விவாதங்கள் |
| ஆசிரியர் | : | பெரியார் |
| வெளியீடு | : | பெரியார் திராவிடர் கழகம்<br>29, இதழியலாளர் குடியிருப்பு<br>திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்<br>சென்னை - 600 041 |
| பதிப்பு ஆண்டு | : | 2007 மே |
| தாளின் தன்மை | : | என்.எஸ். 60 ஜி.எஸ்.எம் |
| அச்சு எழுத்து அளவு: | | 11 புள்ளிகள் |
| நூலின் அளவு | : | டெம்மி 1/8 |
| கணினியாக்கம் &<br>அட்டை வடிவமைப்பு: | | <br>அசுரன் ஊடகம், திண்டுக்கல் |
| அச்சாக்கம் | | கிரியேட்டிவ் கிராபிக்ஸ், சென்னை |
| நூல் கிடைக்குமிடங்கள்: | | பெரியார் படிப்பகம்<br>பெரியார் பேருந்துநிலையம் அருகில்<br>மேட்டூர் - 636 401<br><br>பெரியார் படிப்பகம்<br>திருவள்ளுவர் பேருந்துநிலையம் அருகில்<br>காந்திபுரம் - கோவை - 641 044 |
| நன்கொடை | : | உரு. 10 |

# மதங்கள் பற்றிய விளக்கம்

## 1. சிக்கலான பிரச்சனை

பகுத்தறிவுவாதி: மதங்கள் யாரால் உண்டாக்கப் பட்டவை?

ஆஸ்திகன் : மதங்கள் கடவுளால் உண்டாக்கப் பட்டவை?

பகுத்தறிவுவாதி: அல்ல-அவை மனிதர்களால் உண்டாகியவை

ஆஸ்திகன் : ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

பகுத்தறிவுவாதி : சொல்லுகிறேன் கேள். மதங்கள் எத்தனை உண்டு?

ஆஸ்திகன் : பல மதங்கள் உண்டு

பகுத்தறிவுவாதி : உதாரணமாகச் சில சொல்லும்

ஆஸ்திகன் : எடுத்துக்காட்டாக இந்து மதம், புத்த மதம், கிறிஸ்துவ மதம், முகமத்தியமதம், சீக்கிய மதம், பார்சி மதம், சௌராஷ்டிர மதம், முதலியவைகளும் இவற்றுள் பல உட்பிரிவு களும் உண்டு

பகுத்தறிவுவாதி : கடவுள்கள் எத்தனை உண்டு?

ஆஸ்திகன் : ஒரே கடவுள்தான் உண்டு

பகுத்தறிவுவாதி : இவ்வளவு மதங்களும் யாருக்காக உண்டாக்கப்பட்டவை?

ஆஸ்திகன் : மனித வர்க்கத்துக்காகத்தான்

பகுத்தறிவுவாதி : மதத்தால் ஏற்படும் பயன் என்ன?

ஆஸ்திகன் : மனிதன், கடவுளை அறியவும், கடவுளுக்கும் தனக்கும் சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவும், ஆத்ம ஞானம் பெறவும், கடவுள் கருணைக் குப் பாத்திரனாகவும் பயன்படுவதாகும்.

பகுத்தறிவுவாதி : அப்படியானால், ஒரே கடவுள் மனித வர்க்கத் துக்கு இத்தனை மதங்களை ஏற்படுத்து வானேன்?

ஆஸ்திகன் : இது மிகவும் சிக்கலான பிரச்சனையாய் இருக்கிறது. பல பெரியோர்களைக் கண்டு பேசிய பிறகு பதில் சொல்லுகிறேன்.



## இந்து மதம்

பகுத்தறிவுவாதி: அதுதான் போகட்டும், இந்து மதம் என்பது என்ன?

ஆஸ்திகன் : ஹிந்து மதம் என்றால் வேதமதம் என்று பெயர்

பகுத்தறிவுவாதி: வேதம் என்றால் என்ன?

ஆஸ்திகன் : ருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என் 4 வேதங்கள் உண்டு அவ்வேத முறைதான் இந்து மதம் என்பது.

பகுத்தறிவுவாதி : இவ்வேதங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டவை?

ஆஸ்திகன் : வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது

பகுத்தறிவுவாதி : வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது என்று யார் சொன்னார்கள்

ஆஸ்திகன் : வேதம் கடவுளால் ஏற்படுத்தப்பட்டது என்று வேதம் சொல்லுகிறது

பகுத்தறிவுவாதி : இதற்கு ஏதாவது சாட்சியோ ஆதாரமோ உண்டா?

ஆஸ்திகன் : வேதத்துக்கும், கடவுள் வாக்குக்கும் ஆதாரமோ, சாட்சியோ கேட்பது என்றால் அது பாவமான காரியமேயாகும்

பகுத்தறிவுவாதி : அது பாவமாக இருக்கலாம். ஆனால் ஆதாரம் ருஜூ இல்லாமல் ஒன்றை ஒருவன் நம்புவது என்றால் அது குற்றமாகாதா?

ஆஸ்திகன் : இதுவும் சிக்கலான பிரச்சனையாகத்தான் இருக்கிறது. பெரியவர்களைக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

## புத்த மதம்

பகுத்தறிவுவாதி: சரி.புத்த மதம் என்றால் என்ன?

ஆஸ்திகன் :புத்த மதம் என்பது புத்தர் என்கிறவருடைய கொள்கை

பகுத்தறிவுவாதி: அது யாரால் ஏற்பட்டது?

ஆஸ்திகன் : புத்தர், சித்தார்த்தர் என்கிறவர் காலத்தில் ஏற்பட்டது.

பகுத்தறிவுவாதி: அதற்கு என்ன ஆதாரம்?

ஆஸ்திகன் : புத்தர் என்கிறவர் சொன்னதாகச் சொல்லப்படும் வாக்குகள் தான்

பகுத்தறிவுவாதி: புத்தர்தான் சொன்னார் என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆஸ்திகன் : புத்தர் சங்கதி சரித்திரத்தில் பட்டதாய் இருக்கிறது. அன்றியும் அதில் இன்றைய ஆத்மா நிலையில் மற்ற மதங்களைப் போல் கடவுள், கடவுள் வாக்கு, பல அற்புதங்களை நம்ப வேண்டும் என்ற நிபந்தனை முதலியவை இல்லை என்பதோடு ஆலோசனைக்கும் அறிவுக்கும் பொருத்தமானதை எடுத்துக்கொண்டு மற்றவைகளைத் தள்ளிவிடுவதில் பாவமோ குற்றமோ,

கடவுள் தண்டனையோ இல்லை, ஆகையால் அதற்கு ஆதாரம் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசிய மில்லை.

பகுத்தறிவுவாதி: சரி ரொம்ப நல்ல மாதிரி சமாதானம் சொன்னீர்கள் அப்படியானால் அம்மதத்தைப்பற்றி நமக்குக் கவலை இல்லை.

## கிறிஸ்துவ மதம்

பகுத்தறிவுவாதி: கிறிஸ்தவ மதம் என்பது என்ன?

ஆஸ்திகன் : கிறிஸ்துவ மதம் என்பது கிறிஸ்துவரால் சொல்லப் பட்ட கொள்கை

பகுத்தறிவுவாதி: அது எது ?

ஆஸ்திகன் : பைபிள்

பகுத்தறிவுவாதி: கிறிஸ்து என்பவர் யார்?

ஆஸ்திகன் : கிறிஸ்து கடவுள் குமாரர்

பகுத்தறிவுவாதி: அப்படியென்று யார் சொன்னார்?

ஆஸ்திகன் : கிறிஸ்து சொல்லி இருக்கிறார்

பகுத்தறிவுவாதி: ஒருவர் தன்னை இன்னார் என்று நிரூபிக்க அவரது வாக்குமூலமே போதுமா?

ஆஸ்திகன் : ஏன் போதாது?

பகுத்தறிவுவாதி: அப்படியானால் இப்போது ஒருவன் வந்து உம்மி டம் நான் தான் கடவுள் என்று சொன்னால் ஒப்புக் கொள்வீரா?

ஆஸ்திகன் : இதுவும் சிக்கலான பிரச்சனைதான் பெரியவர்களைக் கேட்க வேண்டும்.

## முகம்மதிய மதம்

பகுத்தறிவுவாதி: முகம்மதிய மதம் என்றால் என்ன?

ஆஸ்திகன் : முகம்மது நபி என்பவரால் சொல்லப்பட்ட கொள்கைகளை உடையது

பகுத்தறிவுவாதி: அதற்கு என்ன ஆதாரம்?

ஆஸ்திகன் : குரான் என்னும் வாக்கியம்

பகுத்தறிவுவாதி: அது யாரால் சொல்லப்பட்டது?

ஆஸ்திகன் : கடவுளால் அனுப்பப்பட்ட முகமது நபி அவர்கள் மூலம் வெளியாக்கப்பட்டது

பகுத்தறிவுவாதி: அப்படி என்று யார் சொன்னார்?

ஆஸ்திகன் : நபி அவர்கள் சொன்னார்

பகுத்தறிவுவாதி: அப்படி என்று யார் சொன்னார்?



ஆஸ்திகன் : குரான் வாக்கியங்களில் இருக்கிறதுடன் வேறு பல சாட்சியங்களுமிருக்கின்றன

பகுத்தறிவுவாதி: வேறு பல சாட்சியங்கள் என்பது எவை?

ஆஸ்திகன் : அந்தக் காலத்தில் நபி அவர்களுடன் இருந்த பல பெரியவர்களின் வாக்கு இருக்கிறது.

பகுத்தறிவுவாதி: கடவுளால் அனுப்பப்பட்ட தூதர் என்பதற்கு ஆதாரம் என்ன?

ஆஸ்திகன் : இதுவும் சிக்கலான பிரச்சனை?

## பொது

பகுத்தறிவுவாதி: மற்ற மதங்களும் இது போல் தானே?

ஆஸ்திகன் : ஆம், இப்படிப்பட்டது தான்

பகுத்தறிவுவாதி: அப்படியிருக்க இவ்வளவு மதங்களையும் ஒரே கடவுள் உண்டாக்கி இருப்பார் என்று நீர் நம்புகிறீரா?

ஒன்றுக்கொன்று மாறுபட்டதும் முரண்பட்டதுமான கடவுள் வாக்குகள், கடவுளால் அனுப்பப்பட்டவர்கள். கடவுள் அவதாரங்கள் என்பவர்கள், அவர்களது வாக்குகள், சம்பந்தப்பட்ட மதங்களின் தத்துவங்கள், பலவித கடவுள் தன்மை பெற்றவர்கள் ஆகிய எல்லோ ரையும் ஒரே கடவுள் சொன்னார். அவரால் அனுப்பப்பட்டார்கள். அவர் சிருஷ்டித்தார் என்பது நியாயமாகுமா?

அதனால் தான், இவைகள், ஒவ்வொரு சீர்திருத்தக்காரர்களால், அறிவாளிகளால், முன்பின் ஆராய்ந்து பார்த்து மனித சமூகத்துக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற கவலை கொண்டவர்களால், (மனிதர்களால்) உண்டாக்கப்பட்டது என்று எண்ணவேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாமல் ஒரே கடவுள் இருந்து அவரே இவ்வளவு மதங்களுக்கும் மதகர்த்தர்களுக்கும் ஆதார புருஷர் என்றால், அப்போது கடவுளின் மேன்மைக் குணம் பாதிக்கப்படவில்லையா? யாரோ சில மனிதர்களுக்கு மேன்மை கொடுப்பதற்காகக் கடவுளை முட்டாளாக் குவதும் பல கடவுள்களைச் சிருஷ்டிப்பதும் பல வேதங்களைச் சிருஷ்டிப்பதும் சரியா?

ஆதலால் இம்மாதிரி மதம் என்பது வியாபாரம்; மத கர்த்தகர்கள், வேதம், புராணம் என்பவைகள் வியாபாரச் சரக்குகள் என்பது பகுத்தறிவுக்காரர்களுக்குப் படும் விஷயம். இது சமயம் தப்பாக இருந்தாலும் இருக்கலாம்.

நாம் இருவரும் இவ்விஷயங்களில் ஒரே கருத்துடையவர்களாகி இவைகள் எல்லாம் சற்று நேரத்துக்கு உண்மை என்றே ஒப்புக்

கொள்வோம். அதாவது இந்து மதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்பதையும், வேதம் கடவுள் வாக்கு என்பதையும், கிறிஸ்து கடவுள் அவதாரம் என்பதையும், முகம்மதுநபி கடவுளால் அனுப்பப்பட்டவர் என்பதையும் குரானையும் மற்ற மதத்தையும் ஒப்புக் கொள்வோம். ஆனால் அவைகள் எல்லாம் இன்று ஒன்றாய் இல்லாமல் வெவ்வேறு அபிப்பிராயங்களாகவும் சில முரணானவைகளாகவும் சில ஒரு மதத்துக்கும் மற்ற மதத் தத்துவங்களுக்கும் ஒரு மதத்தலைவருக்கும் மற்ற மதத்தலைவர்களுக்கும் மாறாகவும் இருப்பானேன்?

<u>ஆஸ்திகன்</u> : இதுவும் சிரமமான பிரச்சனையாகத்தான் இருக்கிறது. பெரியவர்களைக் கேட்க வேண்டும்

<u>பகுத்தறிவுவாதி</u>: சாவகாசமாய் பெரியவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் இன்று நாம் எதை நம்பி எப்படி நடந்துகொள்வது?

<u>ஆஸ்திகன்</u> : இவைகள் எல்லாம் உண்மை என்றோ, அல்லது உண்மை அல்ல என்றோ, எப்படியோ இருக்கட்டும். அதற்காக நாம் கவலைப்பட வேண்டாம், உலகில் மனிதன் உயிருள்ளவரை நல்லதை எண்ணி, நல்லதைச் செய்ய வேண்டும் - அவ்வளவுதான்

<u>பகுத்தறிவுவாதி</u> : நல்லது எது தீயது எது என்பதற்கு அளவு கருவி என்ன?

<u>ஆஸ்திகன்</u> : இது மிகவும் கஷ்டமான பிரச்சனையாகத் தான் இருக்கிறது. ஆனாலும் பெரியவர்கள் நடந்து காட்டியது சொல்லி இருப்பது இவைகளைக் கண்டு தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

ப-தி : பெரியவர் யார் என்பதற்கு அளவு கருவி என்ன? ஒருவர் வேறு ஒருவரைப் பெரியவர் என்றால் மற்றொருவர் அவரை ஒப்புக்கொள்வதில்லை. அவருக்கு மாறாக அல்லது வேறொன்றைச் சொன்னவரைப் பெரியவர் என்கிறான் இதற்கு ஒரு பரீக்ஷை குறிப்பு வேண்டுமே?

<u>ஆஸ்திகன்</u> : இதுவும் கடினமான பிரச்சனையாகத்தான் இருக்கிறது. இதற்கெல்லாம் உம்முடைய சமாதானம் தான் என்ன? சொல்லும் பார்ப்போம்.

<u>பகுத்தறிவுவாதி</u>: என் சமாதானம் என்ன? நான்தான் மதத் துவேஷி பார்ப்பனத் துவேஷி, நாஸ்திகன். சுயமரியாதைக்காரன் என்றெல்லாம் பெயர் வாங்கினவனாய் விட்டேனே. என் பேச்சை யார் கேட்பார்கள்? நீர் ஆஸ்திகராயிற்றே உமக்குத் தெரியுமென்றும் தெரியாவிட்டாலும் உம்முடைய உள்ளத்தில் சதா குடிகொண்டிருக்கிற கடவுள் உணர்த்துவார் என்றும் கருதி உண்மையான சந்தேகத்தை நிவர்த்தி



செய்து கொள்ளுவதற்காகவே கேட்டேன். நல்ல வேளையாக நீர் பதில் சொல்லாவிட்டாலும் என்னை வையாமல் பெரியவர்களைக் கேட்டுச் சொல்லுகிறேன் என்று சொன்னீரே அதுவே எனக்கு ரொம்ப திருப்தி ஆஸ்திகர்களில் இப்படிப்பட்டவர்கள் அருமை. மிக அருமை சந்தேகம் கேட்டால் அடி,உதை,நாஸ்திகன், பிராமணத் துவேஷி, ஆரியதுவேஷி ................ என்றெல்லாம் வெறி பிடித்தவர்கள் போல் ஆடுவார்கள். ஆதலால் உம்மைப் பற்றிக்கூட எனக்கு சந்தேகம்தான்.

<u>ஆஸ்திகன்</u> : என்ன சந்தேகம்?

<u>பகுத்தறிவுவாதி</u>: நீர் ஆஸ்திகரா அல்லவா என்று

<u>ஆஸ்திகன்</u> : நான் உண்மையில் ஆஸ்திகன். அதாவது ஒரு கடவுள் இருப்பார் என்று நம்புகிறவன்

ஆனால் இத்தனை மதங்களையும் மதகர்த்தர்களையும் அந்தந்த மத வேதங்களையும் அவையெல்லாம் கடவுளால் சொல்லப்பட்டவை என்பதையும், அவ்வேதக் கதைகள் புராணங்கள் ஆகியவை உண்மை என்பவைகளையும் பற்றி அவநம்பிக்கை கொண்டவன் தான்.

<u>பகுத்தறிவுவாதி</u>: அப்படியானால் கடவுள் ஒருவர் உண்டு என்று மட்டும் கூறுகிற உன் கடவுள் நம்பிக்கையை யார் எந்த ஆஸ்திகர் லட்சியம் செய்வார்?

ஒரு குறிப்பிட்ட மதகர்த்தர் அல்லது ஒரு குறிப்பிட்ட மதம் என்பவை களை ஏற்றுக் கொள்ளாதவர் நம்பாதவர் எல்லோரும் மற்ற மதக்காரனுக்கு நாஸ்திகனே-நம்பிக்கையற்றவனே ஆவான்.

<u>ஆஸ்திகன்</u> : யாரோ எப்படியோ போகட்டும் எனக்கென்ன? என் புத்திக்குச் சரி என்று பட்டதைச் செய்து விட்டுச் செத்துப் போகிறேன்.

<u>பகுத்தறிவுவாதி</u>: ஏன் சாகிறீர், உயிருடன் தான் இருமே! உமக்குச் சரி என்று படாததைத் தான் செய்யுமே! எனக்கென்ன கவலை? எப்படி இருந்தாலும் ஆஸ்திகர்கள் உம்மை வைதுகொண்டுதானிருப்பார்கள் என்பதைத்தான் சொல்லவந்தேன். வேறொன்றும் இல்லை. சரி போய் வாரும். பிறகு சந்திக்கலாம்.

# 2. அப்பவே வாக்குக் கொடுத்திட்டேன்!

*தாய்* : ஏண்டி சேஷுகுட்டி அவன் சாயபு ஆச்சு தேடி, அவன்கிட்டே என்னடி ரகசியம் பேசுறே

*மகள்* : இல்லே அம்மா, நான் சின்னக்குழந்தையா இருக்கச்சே வீதியிலே விளையாடிண்டிருந்தப்போ மணலில் ஒரு வீடுகட்டினேன். அதை வந்து இந்த அடுத்த ஆத்து சுக்கூர் இடிக்க வந்தான். நான் இடிக்காதடா என்று சொன்னேன். அப்படியானா என்னை கட்டிக்கிறையா என்று கேட்டான். நானு வீடு இடிந்துபோமென்னு ஆகட்டுமென்று சொல்லிவிட்டேன். அதை இத்தனை நாள் மனசிலே வெச்சிண்டிருந்து இப்ப வந்து கேக்கறாண்டி.

*தாய்* : நீ என்னடி சொன்னாய்?

*மகள்* : நான் என்னம்மா சொல்லட்டும்; ஆகட்டும் என்று சொல்லித் தொலைச்சேன்

*தாய்* : அடி அடி நாசமாப்போன முண்டே, துலுக்கனையா கட்டிக்கிறேண்ணு சொன்னே, நீ பேதியிலே போக, நீ பிளேக்கிலே போக, உனக்கு ஒரு உள மாந்தை வர

*மகள்* : கோவிச்சுக்காதே அம்மா, அப்ப நான் ஆகட்டும் என்று சொல்லியிருந்தேன் அல்லவா? அதை வச்சிண்டு வந்து கேட்டான் பின்னே நான் என்ன சொல்றது; அப்ப நான் அப்படிச் சொல்லாமல் இருந்தா வீட்டை இடிச்சிருப்பானேம்மா

*தாய்* : உன் தலையிலே நெருப்பைக் கொட்ட நான் 2,3 வருஷத்திற்கு முன்னையே உன்னைக் கல்யாணம் பண்ணனும் என்று உங்கப்பாகிட்டே சொன்னபோது சாரதா சட்டமோ லக்ஷ்மி சட்டமோ என்னமோ பேரெழவுச்சட்டம் குறுக்கிடறதடி என்று சொன்னார் அந்தப் பிராமணன்; இப்போ நீ மண்ணுக்கொளிச்சிண்டு விளையாடினபோதே சுக்கூருக்கு வாக்குக் கொடுத்துட்டேன்னு சொல்றியே, இன்னம் கொஞ்ச நாள் போனா பறையனுக்கும் சக்கிலிக்கும் பால் குடிக்கிறபோதே





வாக்குக் கொடுத்துட்டேனென்றல்லவாடி சொல்லுவாய். என் வயிறு பத்தி எறியரதேடி. நீ அந்த சுக்கூரோடு கொஞ்சினதைப் பார்த்து

*மகள்* : இல்லேம்மா, உன்னெதிரிலே நான் கொஞ்சுவேனாம்மா 2,3 வருஷத்திற்கு முன்னே கல்யாணம் ஆயிருந்தால் கூட அப்பவும் நான் வாக்குத் தவற மாட்டேனம்மா. இதுக்கு நீ தான் ஒரு வழி சொல்லேன். இப்ப அவன் வந்து "நீ சொன்ன வார்த்தை என்னடி சேஷுகுட்டி" என்பானே. அப்பவும் இப்படித்தானே கேட்டான்.

*தாய்* : அடிச்சண்டாளி. சொன்ன வார்த்தையாவது மண்ணாங்கட்டியாவது, அவன் இனிமே இங்கே வந்தா உன் மயிரை அறுத்திடுவேன் தெரியுமா?

சின்னக்குழந்தையாய் இருக்கும்போது என்னமோ சொன்னாளாம். அவன் வந்து இப்போ கேக்கறானாம். என்னடி அநியாயம் இது?

*மகள்* : நீ மயிரை அறுக்க வாண்டாம்மா, சுக்கூரே என் மயிரைக் கத்திரிச்சுடறேன் என்று சொல்லி இருக்கான். யாரோ சரோஜன் குட்டிகளாம். அதுகள் மயிரை கத்தரிச்சிண்டிருக்காம். அதுமாதிரி என்னையும் கத்தரிச்சி விடறேன்னு சொன்னான்.

*தாய்* : அய்யய்யோ கெட்டுப்போச்சடிகாரியம். நம்ம குடும்பத் தையே, ஜாதியையே, பாழாக்கிட்டாயே, நான் காவேரியில் போய் வீழ்ந்துடறேண்டி உன்னாலே.

*மகள்* : அம்மம்மா, வேண்டாம்மா, பின்னே நா என்னம்மா சொல்லட்டும் சுக்கூருக்கு?

*தாய்* : என்னடி சொல்லறது நான் அப்போ கொழந்தையா இருக்கச்சே வேடிக்கையா சொன்னா. இப்ப என்னமாடா வந்து இத்தனை தைரியமாகக் கேக்கறே என்று அதட்டிச் சொல்லடி.

*மகள்* : இப்பவும் நான் கொழந்தைதானம்மா

இப்ப யாரையாவது கட்டிண்டா, கட்டின ஆம்படையானை இன்னும் 10 நாள் பொறுத்து; நான் குழந்தையா இருக்கும்போது கல்யாணம் செய்து கொண்டேன். நீ வாண்டாம் போ இண்ணு சொன்னா போய்விடுவானா? அப்படி தாம்மா சுக்கூரும் கேட்பான். ஒரு தடவை வாக்குத் தவறினால் என்ன? இரண்டு தடவை வாக்குத் தவறினால் என்ன? அப்புறம் தினம் தினம் வாக்குத் தவறினால் தான் என்னம்மா?

நான் சுக்கூர் கிட்டே சொல்லீட்டேன். கட்டினா அவனைக் கட்டிக்கிறேன். இல்லாவிட்டால் கன்னியாமடத்தில் சேர்ந்துக்கிறேன். எனக்குப் புருஷனே வாண்டாம். சுக்கூர் முகத்தில் மறுபடியும் நான் எப்படிம்மா விழிப்பேன்.

*தாய்* : உங்கப்பா வரட்டுமடி. நாளைக் காலையில் வரப்போறார். இதெல்லாம் அவரிடம் சொல்லி உன்னை இந்த வாரத்துக்குள்ளாகவே எவன் தலையிலாவது கட்டித் தொலைத்து விடறேன்.

*மகள்* : அப்படியா என்னமோ செய்துக்கோ, நான் என்னமோ சுக்கூருக்கு வார்த்தை கொடுத்திட்டேன்.

*தாய்* : உம்,உம் கொடுப்பேடி ஆள் எளப்பாளியாய் இருந்தால், என்று சொல்லிவிட்டு பேச்சை முடித்து விட்டாள்.

இரவு 1 மணிக்கு சுக்கூரும் சேஷுக்குட்டியும் தப்பி ஓடிவிட்டனர். காலையில் தகப்பனார் வந்தார்.

*தாய்* : ஏம்பேச்சே கேட்டீளா; சேஷுகுட்டி அடுத்தாத்து சுக்கூருடன் ராத்திரி ஓடிட்டா

தகப்பனார் : அவனோடுதான் போனாள் என்று உனக்கு எப்படித் தெரியும்.

*தாய்* : நேற்று அவனோடு சிரிச்சிண்டு பேசிக்கிண்டிருந்தா நான் கண்டிச்சேன். அவள் ஒரு சின்ன கொழந்தையாய் மண்ணுக் கொளிச்சிண்டு விளையாடும்போது அவனை கட்டிக்கிறேன்னு வாக்குக்கொடுத்துட்டாளாம். அதுக்காக அவனைக் கட்டிக்கணுமாம். அப்படின்னு என்னிடம் சொல்றா. வைதேன். அப்பா வந்தா சொல் ரேண்ணேன். பயந்துண்டு ஓடிட்டா முண்டை.

*தகப்பன்* : சனியன் தொலைந்தது போ; அவன் மேலே அவளுக்கு ஆசை வந்துட்டுது. என்னமோ சொல்லிண்டு ஓடிட்டா; நல்லகாரியம்; இந்த நம்ம அயோக்கிய ஜாதியிலேயே அவளுக்கு தகுந்த மாப்பிள்ளை வேணுமுன்னா ரூ.5000 வரதக்ஷணை கல்யாணச் செலவு ரூ.2000 ஆக 7000 ரூபாயுக்கு எங்கே போறது? யாரை விக்கிறது?

போகட்டும் போ! அவனும் எஸ்.எல்.சி. பாசு பண்ணி இருக்கான்; நல்ல அசல் சாயபு; பிராமணனாட்டமா செக்கச் செவேலென்னு இருக்கான். பிராமணன் எம்.ஏ.படிக்கிறதும் சரி, சாயபு எஸ்.எல்.சி படிக்கிறதும் சரி; சீக்கிரத்திலே ஏதோ வேலைக்கு வந்திடுவான், நம்மை விட்டது சனியன்.

*தாய்* : ஐயய்யோ அசட்டு பிராமணா! அப்படித்தான் இருந்தாலும் ஒரு முதலி நாயக்கன் இல்லையா? சாயப்போடவா ஓடறது?

*தகப்பன்* : என்னமோ அவ கண்ணுக்கு பிடிச்சவனோடு போய்ட்டா; நம்ம ஜாதியிலே இல்லாவிட்டால வேறு யாரோடு போனால்தான் என்ன? முதலிக்கும் சாயபுக்கும் என்னடி வித்தியாசம், மொட்டை ஒன்றுதானே உனக்கு என்னத்துக்கடி இத்தனை ஆத்திரம்.

*தாய்* : சுக்கூர் அவாத்திலே பெண்ணை மூடிபோட்டல்லவா வெச்சிடுவா. இனி அவளைப் பார்க்க முடியுமோ?

*தகப்பன்* : நீ வேணுமின்னா அவாத்துக்குப் போய் தினம் பாத்துட்டு வாடி, யாரு வாண்டாமென்றா.

*தாய்* : சரி சரி அவாத்துக்கு போனா நாலுபேரு என்ன சொல்லுவா?

*தகப்பன்* : என்னமோ சொல்லுவா. நான் சம்மதிச்சா அப்புறம் யார்டீ கேக்கெறவா - இனி அப்படித் தாண்டி எல்லாம்.

நமக்கு என்னடி பயம் ரூ. 7000 மிச்சமாச்சுடி. சுக்கூர் அவப்பா சிபார்சிலே நம்ப மணிக்கிகூட ஒரு உத்தியோகம் வந்துடும். நீ ஒண்ணும் சத்தம் போடாதே. யாராவது கேட்டா என்ன சொல்றதுங்கிறயா. காங்கிரஸ்காரர் கேட்டா இந்து முஸ்லீம் ஒற்றுமை என்று சொல்லடி, ஜஸ்டிஸ்காரர் கேட்டா சுயமரியாதையில் சேர்ந்துட்டோம் என்று சொல்லடி. அப்புறம் யார் நம்மண்டை வருவா பார்ப்போம்.

*தாய்* : சரி பகவானே காலம் இப்படியா கெட்டுப் போகணும்?

*தகப்பன்* : என்னடி கெட்டுப் போச்சி? நாள வருஷத்துக்குப் பார்டீ, சேஷுகுட்டி தங்கவிக்கிரகமாட்டமா பிள்ளை பெத்துடப்போறா, எங்கேயோ அவா சௌக்கியமாய் இருந்தால் சரி; போய் வேலையைப் பார்.

# 3. நமோ ! நமஹா! நமோ நமஹா!

*ஜோசியர் :* ஓய் அப்பு அய்யரே, உமக்கேன்காணும் இப்போது கண்ணே தெரிவதில்லை. சிறிது கூட நன்றி விசுவாசமில்லை.

*அர்ச்சகர் :* என்னங்காணும் ரொம்ப ரொம்ப பேசுகிறீர். எதிலே ஓய் நன்றிவிசுவாசமில்லாததை என்னிடம் கண்டீர். நீர் எனக்கு ரொம்பவும் செய்து விட்டாப்போலும். ஆனால் நான் ஏதோ பலனடைந்து உமக்கு நன்றி காட்டவில்லை போலும்.

*ஜோசியர் :* ஆமாங்காணும், இப்போ சொல்லமாட்டீரோ தினே தினே ஐம்பது அறுபது அர்ச்சகத்தில் உமக்கு கிடைக்கிறது. இதற்கு யார் காரணம் என்பதை மறந்து விட்டீர். நன்றி மறக்காதீர்காணும்.

*அர்ச்சகர் :* ஓகோ. இதற்கென்னங் காணும் உமக்கு நன்றி காட்டுவது தினம் 50, 60 வருகிறது; அதற்கு மேலும் சில நாட்களில் திங்கள், வெள்ளி, சனி கிழமைகளுக்கு தினம் 100 ரூபாயும் வருகிறது. இதற்கு நீர் என்னங்காணும் தானாவதி? முன்னே நடந்த சண்டையில், கூலிக்காரன் முதல் சகலருக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு கொள்ளை அடிப்பது போல் பணம் சேர்ந்தது. அதிகாரிகளுக்கும் அதுபோலவே பங்கு வந்தது. அந்த மடப்பயல்கள் இந்தக் கொள்ளைகளை யுத்தம் கொடுத்தது என்று எண்ணாமல் பகவான் கொடுத்தார் என்று நினைத்துக்கொண்டு கோயிலுக்கு வந்துவிழுந்து கும்பிட்டுவிட்டு எனக்குக் கொடுத்துவிட்டுப் போகிறான்கள் இதற்கு நீர் என்னங்காணும்.

*ஜோசியர் :* அட நன்றி கெட்ட ஜென்மமே, அவன்கள் தானாகவா வருகிறான்கள். நானல்லவா அவன்கள் ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று ஒவ்வொருவனையும் பார்த்து, ஐயா உமது ஜாதகத்தில் 8ம் இடத்திலே சனி பார்க்கிறான். 9-ம் இடத்திலே ராகு உச்சம் பெற்று இருக்கிறான். 5ம் இடத்திலே சுக்கிரனை வழி மறித்துக் கேது நிற்கிறான். அதற்கு ஒரு வாரம் நவக்கிரக பூசை பண்ண வேண்டும். அஷ்டோத்திரம் செய்ய வேண்டும் சகஸ்ர நாமம் பண்ண வேண்டும் மண்டலாபிஷேகம் பண்ண வேண்டும். கிரகசாந்தி செய்ய வேண்டும். என்று எல்லாம் சொல்லி அந்த மடப்பயல்களைக் கோவிலுக்கு நானல்லவா விரட்டி அடித்தேன். அதை நம்பித்தானே அந்த மடப்பயல்களும் இப்படி எல்லாம் செய்தால் இன்னும் கொள்ளை லாபம் கிடைக்கும் என்றும், கிடைக்காவிட்டாலும் வந்த பணமாவது போகாமல் இருக்கும் என்றும் கருதி கோவிலுக்கு ஓடிவந்து உமக்கு அழுதுவிட்டு வருகிறான்கள்.



நான் இப்படிச் சொல்லாமல் வேறு விதம் சொல்லி இருந்தால் உமக்கு இந்தக் கொள்ளை கிடைக்குமா? நாளை முதல்பாரும் இந்தக் கூட்டத்தை அப்படியே விஷ்ணு கோயிலுக்குத் திருப்பிவிடுகிறேன். இதிலிருந்தாவது என் சங்கதி தெரிந்து கொள்ளும்.

*அர்ச்சகர் :* ஜோசியர்வாள். அப்படி ஒன்றும் செய்து விடாதீர்கள் இந்த மாதம் முதல் மொத்தமாக உமக்கு மாதம் 20ரூபா வீதம் கொடுத்து வருகிறேன். இது தவிர மொத்தத்தில் எனக்கு மாதம் 100 ரூபாய்க்கு மேல்வந்தால் மேல் கொண்டுவருவதில் சரிபகுதி 50 பர்செண்ட் உமக்குத் தந்து விடுகிறேன். இதெல்லாமல் மற்றும் கிரகசாந்தி செய்வதற்கு என்று ஒரு அணா வந்தாலும் அதில் அரை அணா உமக்குத் தந்துவிடுகிறேன். எப்படியாவது தினம் 10,15 மடையன்களைப் பிடித்துச் சாந்திக்கும் கிரகதோஷத்திற்கும் தள்ள வேண்டியது உமது கடமை.

*ஜோசியர் :* அப்படிச் சொல்லுங்காணும் இப்போது தெரிந்ததா நம்ம சங்கதி? இனிப்பாரும் எத்தனை மடையன்களை அதுவும் ஜோடி ஜோடியாய்த் தம்பதி சகிதம் தள்ளி விடுகிறேன் என்பதை, இதிலே ஒரு விஷயமன்னோ?

*அர்ச்சகர் :* அதென்ன?

*ஜோசியர் :* இனிமேல் நீர் கொடுத்து வருவது சரி. இது வரை நீர் அடித்த கொள்ளைக்கு எனக்குப் பங்கு எங்கே? உம்ம வீட்டை ரிப்பேர் செய்துவிட்டீர். கிட்டத் தட்ட ஆறு ஏழாயிரம் ரூபாய் பாங்கியில் போட்டிருக்கிறீர். உம்ம மூத்தார் மகனை டெல்லிக்குப் போட்டிப் பரீக்ஷைக்கு அனுப்பியிருக்கிறீர். உம்ம தாசி தங்கத்துக்கு 2000 ரூபாய் போல் நகை பண்ணிப் போட்டிருக்கிறீர். நீரும் தினம் பிராந்தி, ஒயினாகவே சாப்பிடுகிறீர். லாலா கடையில் மாதம் 50, 60க்கு பிரியாணி, வெளுத்து வாங்குகிறீர்; நீரும் நன்றாய் அகலத்தில் வளர்ந்திருக்கிறீர். இவையெல்லாம் இந்த இரண்டு மூன்று வருஷத்தில் தானே? ஏங்காணும். எனக்கு ஏதாவது கொடும். இல்லாவிட்டால் இந்தச் சங்கதியெல்லாம் வெளியில் சொல்லி அத்தனை மடையன் களையும் விஷ்ணு கோயிலுக்குத் திருப்பி விடுவேன். அங்கேயும் நவக்கிரக சன்னதி வைத்தாய் விட்டது தெரியுமா?

*அர்ச்சகர் :* ஓய்,ஓய் சத்தமாகப் பேசாதீர்காணும், இதெல்லாம் உமக்கெப்படித் தெரியும்?

*ஜோசியர் :* உம்ம இளைய சம்சாரம் இவைகளை எல்லாம் உங்க வீட்டுக்குத் தினம் வருகிறாரே பெரியண்ண செட்டி அவரிடம் சொல்லி அழுதிருக்கிறாள். பெரியண்ண செட்டி இதை என்னிடம் சொன்னான்.

நான் அவனை இதையெல்லாம் வெளியில் சொல்ல வேண்டா மிண்ணு கேட்டுக் கொண்டேன். நீர் சதா தாசி தங்கம் வீட்டில் புரளுவதும், அவளுக்குக் கிராக்கி பிடித்து விடுவதும், பெரியண்ண செட்டி தினம் உம்ம வீட்டுக்கு வந்து புரளுவதும் யாருக்குத் தெரியாதுங்காணும்? நீர் எனக்குச் சரியானபடி மரியாதை செய்யா விட்டால் கண்டிப்பாக நான் நோட்டீசு போடப் போகிறேன்.

*அர்ச்சகர் :* ஐயோ பாவி ஜோசியரே, இப்படி அபாண்டமாகப் புளுகுறீரே, தங்கம் தினம் கோவிலுக்கு வருகிறாள். அவளுக்காகச் செலவிடப் பையன்கள் கோவிலுக்கு வருகிறான்கள். அதிலே ரெண்டுகாசு மாதம் 10,20 என்று வருகிறது. அதற்காக அவளைத் தினம் பார்த்துக் கோவிலுக்கு வரச்சொல்வேன். இது எல்லாக் கோவிலிலுந் தானே நடக்கிறது? ரங்கநாதன், நடராஜன், அண்ணாமலை முதலிய சாமி கோவில்களில் நடக்காதது என்ன இவ்விடம் நடந்து விட்டது? பெரியண்ண செட்டி வீட்டிற்கு வருவதைப் பற்றிப் பேசுகிறீரே; கட்டளைக்காரன் போக்குவரத்தில்லாத அர்ச்சகன் வீடு ஒன்று சொல்லும் ஓய் பார்க்கலாம்! அதனாலே கண்டதெல்லாம் பேசுவதா? லாலா கடைக்கு நான் ஏன் போகிறேன்? அவனுக்கு இப்போது வியாபாரம் ஜோர் அதனால் தினம் கோவிலுக்கு வருகிறான். அப்படியே தங்கத்தையும் பார்த்து விட்டுப் போவான். அதன் நிமித்தம் அவன் கடைக்குப் போறேன். இதையெல்லாம் எவனோ அயோக்கியப்பயல் இப்படிக் கட்டி விட்டான், நீர் அதை நம்புகிறீரே, இது தர்மமா?

*ஜோசியர் :* ஓய் அசட்டுப் பிராமணா, இதெல்லாம் உம்முடைய இளையாள் சொன்னதுங்காணும், நான் சொல்லவில்லை பெரியண்ண செட்டி என்னிடம் நாள் பார்க்க வந்தான் நான் அவனுக்கு புதுயோகம் அடிக்கிறதென்று ஒரு பலன் சொல்லி; உண்மையா என்று கேட்டேன். அவன் கொட்டி விட்டான்.

*அர்ச்சகர் :* பகவான் தான் இவர்களைக் கேட்க வேண்டும் அந்த ஆதிகேசவன்தான் கூலி கொடுக்க வேண்டும்.

*ஜோசியர் :* பகவான் என்ன? வெங்காயம் என்னங்காணும் நடக்கிற காரியத்துக்கு யாருக்குக் கூலி? உமக்குத்தான் கொடுக்க வேண்டும். அகராதிப்படி ஆதிகேசவன் என்றால் என்ன தெரியுமா? ஆதியென்றால் பழைய என்று அர்த்தம். கேசம் என்றால் மயிர் என்று அர்த்தம். ஆதிகேசவனென்றால் பழைய மயிராண்டி என்று அர்த்தம். நாம் நம்ப தேவ (சமஸ்கிருத) பாஷையில் சொல்லுவதால் அந்த மடப்பயல்கள் கேட்டுக் கொண்டு அந்தப் பழைய மயிராண்டிக்கும் ஒரு கும்பிடு போட்டு நமக்குக் காசைக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். திராவிடன்களுக்கு மூளை ஏதுங்காணும்? அதுதான் அவாளை





‘என்.பி’ என்கிறோம்; அவாள் நம்மை ‘பி’ என்கிறார்கள். ‘பி’ என்றால் என்ன தெரியுமா? ‘பி’ என்றால் பிரெயின்; பிரெயின் என்றால் அறிவு. என்-பி என்றால் நோ பிரெயின்; அறிவில்லாதவன். ஆகவே நாம் அறிவாளி; பிராம்மணா அல்லாதவா அறிவில்லாதவா; இது அவாளும் நாமும் சர்க்காரும் சேர்ந்து ராஜி மேலே ஏற்படுத்திக் கொண்டது.

*அர்ச்சகர் :* ஓய்;ஓய்; இதெல்லாம் இப்படிப் பேசாதிங்காணும் - எவனாவது கேட்டுண்டிருந்தா உதைக்கப் போறான்.

*ஜோசியர் :* ஆ..! போங்காணும்; மூளை இல்லையென்றால் கோபம் வருமாங்காணும்? சூத்திரா. சூத்திரச்சிகள் என்பதற்கே கோபியாதனுக்கு மேலும் மூளை இல்லையென்றால் கோபம் வருமாங்காணும்? அவாளுக்கு படிப்பிருந்தால் அவாள் கோவிலுக்கு வருவாளா? வெளியிலே நின்று கும்பிட்டு நம்ம மேலே படாமல் ஒடுங்கி அடங்கிப் போவாளா? அது கிடக்கட்டும். அது வெகுநாளைய சங்கதி. நம்ப காரியம் பார்ப்போம். நீர் பெரியண்ண செட்டி கட்டளைக்காரன், சும்மா வந்து போகிறான் என்கிறீரே. நீரும் சிகப்பு; உம்ம ஆம்படையாளும் சிகப்பு. உம் குழந்தை கரிசட்டி மாதிரி அவனை உருக்கி வார்த்தாப்பலேயிருக்கு! அவன் குழந்தைகள் கூட இப்படியில்லையே! என்று பல பேர் பேசறா! (தனக்குள்ளாவே பேசிக்கொள்கிறான்) அதெப்படி இருக்கும்? அவன் தினமும் உம்ம வீட்டிலேயேயிருந்தால் கதவில்லாத வீட்டில் நாய் நுழைவது இயற்கைதானே? இதையெல்லாம் உம்ம ஆதிகேவசன் கேட்டு என்ன செய்ய முடியும்?

*அர்ச்சகர் :* சரி; உமக்குக் கோடி நமஸ்காரம். இந்தாரும் 500ரூபாய். இனி மாதம் 50 ரூபாய் தருகிறேன். இந்தப் பேச்சை இப்படியே விட்டுவிடும். இனி நாம் சகோதரர் போல் இருப்போம்.

*ஜோசியர் :* சரி, எல்லாம் மறந்து விட்டேன். உண்மையிலேயே மறந்து போய் விட்டது ஒரே ஒரு சங்கதி.

*அர்ச்சகர் :* அதென்ன இன்னமும் சொல்கிறீரே

*ஜோசியர் :* உம்ம தங்கம்மாளை 2 நாளைக்கு ..........

*அர்ச்சகர் :* ஏங்காணும். அவளோ தாசி. அவளுக்கு நாயகன் பணந்தான். பணம் கொடுத்தால் அவள் நீர் இருக்குமிடத்தைப் பார்த்துண்டு வருவள்.

*ஜோசியர் :* பணம் கொடுத்தால் அதற்கு நீர் என்னங்காணும்? உம்ம தயவில் அவள் வரணும் என்றுதானே உம்மைக் கேட்கிறேன்.

அர்ச்சகர் : நாளைக்கு வெள்ளிக்கிழமை அவள் கோவிலுக்கு வருவாள். நீரும் அங்கு வந்து அவளை ஆசிர்வாதம் பண்ணுகிறமாதிரி பேசிவிட்டுப்போம். பிறகு அவளை உம்ம வீட்டுக்கு கிரகபலன் தெரிய வரச்சொல்லுகிறேன் மற்றச் சங்கதியும் ஜாடைமாடையாகச் சொல்லி அனுப்புகிறேன். அப்புறம் நீரே பார்த்துக் கொள்ளுமே; நீரோ பிராமணர். உம்ம உடல் அவள் மீது பட்டால் மோக்ஷம் என்று சாஸ்திரம் சொல்கிறது. அந்தச் சுலோகத்தையும் சொல்லியனுப்புகிறேன். நீரும் உனக்கு இனி தோஷம் இருக்கிறது - அதற்கு ஒரு வாரம் சனி பகவானுக்கு நெய் விளக்கு வைத்து 2 நாளைக்காவது பிராமண சேவை செய்தால் கிரக தோஷம் தீரும் என்று சொல்லிவையும். அவள் என்னிடம் வந்து சொல்வாள். அதற்கு நீரே சரி என்று சொல்லிவிடுகிறேன். அப்புறம் உம்ம சங்கதி அவள் சங்கதி ......

ஜோசியர் : ஏங்காணும் அவள் தாசியாயிற்றே, மகா கெட்டிக்காரியாயிருப்பாளே. இதற்கெல்லாம் ஏமாந்து விடுவாளா?

அர்ச்சகர் : போங்காணும் பைத்தியமே, தாசி என்ன? அநேக பெரிய வீட்டுப் பெண்களுக்கு எல்லாம் இம்மாதிரி சொல்லி அவர்களும் அப்படியே நடந்து கிரகதோஷத்தைத் தீர்த்துக்கொள்கிறார்கள், நீராய் கூப்பிட்டாலும் முடியும்; நானாய்ச் சொன்னாலும் முடியும். சாமி கிரகம் என்று சொன்னால் அவர்கள் சம்மதிக்கா விட்டாலும் அவர்கள் அவயவங்கள் முந்திவிடும். நம்மோட பெரியவாளைப் பயித்தியக்காரர் என்றா எண்ணியிருக்கிறாய்? சூத்திராள் என்றால் அசல் சூத்திராள் தாங்காணும்.

ஜோசியர் : சரி, நமஸ்காரம், போய் வருகிறேன். நாளைக்குத் தானே

அர்ச்சகர் : ஆம் நாளைக்குத்தான். நாளைக்குத்தான். நீர் மாத்திரம் இதையெல்லாம் வெளியில் சொல்லி விடாதேயும்.

ஜோசியர் : இல்லை. இல்லை. தங்கம்மாளைத் தவிர மற்றதெல்லாம் முன்னயே மறந்து விட்டேன்.

அர்ச்சகர் : சரி,சரி

நமோ நமஹா, நமோ நமஹா.



# 4. நான் இருக்கப் பயமேன்?

தகப்பன் : டேய் தங்கவேலு! என்னடா படிக்கவே மாட்டேங்கிறாயே. உனக்குப் பள்ளிக்கூட சம்பளம் எத்தனை, வூட்டு வாத்தியாருக்கு சம்பளம் எத்தனை. இன்னமும் புத்தகம், பாலும், பருப்பும் எத்தனை? மாசம் 30,40 ரூபா உனக்கு ஒருத்தனுக்கு செலவு ஆகுது. நீ படிக்காமே இப்படியே திரியிறயே, இது என்னடா நாயம்.

மகன் : என்னப்பா கண்ணை மூடிக்கிட்டு பேசுறீங்கோ. நா படிக்கிறனோ இல்லையோ அதெல்லாம் உங்களுக்கு என்னத்துக்கு. பாசு பண்ணிப்போட்டால் போதுமல்லவா உங்களுக்கு.

தகப்பன் : அடமுட்டாள் பயலே படிக்காவிட்டால் எப்படிடா பாசு பண்ணுவே?

மகன் : அதெல்லாம் உங்களுக்கு என்னத்துக்கு, உங்களுக்கு பாசுதானே வேணும்?

தகப்பன் : அடே! மறுபடியும் அப்படியே பேசறயே. படிக்காமே கழுதை மேச்சிட்டுத் திரியிறே. பாசு பண்ணப் போறையாமா எப்படிப்பண்ணுவே? செருப்பா சுத்தம் பண்ணுவே.

மகன் : இல்லேப்பா; கோவிச்சிக்காதீங்கோ. அது ஒரு ரகசியம் இருக்குது; நான் எப்படியும் பாசு பண்ணிப் போடுவேன்.

தகப்பன் : எப்படிடா?

மகன் : அப்பாஆஆ இதொபாரு. இதென்ன தெரியுமா இதுதான் சாயிபாபா டாலர். இதை வாங்கி கழுத்திலேயோ கையிலேயோ, இடுப்பிலேயோ கட்டிக்கிட்டா படிக்கவே வேண்டியதில்லேப்பா. தானாய் பாசாயிடும் தெரியுமா?

தகப்பன் : அட அட சோதாப்பயலே! உனக்கு எந்த மடையண்டா இப்படிச் சொல்லிக் கொடுத்தவன்? அவனை அடிக்கணுமடா....... முதல்லே. இது என்னடா அநியாயம்; நான் மாதம் 30,40 உன் எளவுக்கு அளுகிறேன். நீ கக்குவான் பிள்ளைக்கு இடுப்பிலே கட்டுற நாய்க்காசு

மாதிரி ஒண்ணக்கட்டிக்கிட்டுபடிக்க வேண்டியதில்லேண்ணு கழுதை மேக்கிறையேடா, உங்கூடத் திரியுதுகளே இந்தக் குட்டிச் சுவருங்கெல்லாம் இப்படித்தானா.

*மகன்* : ஆமாப்பா இந்தப்பசங்ககூட அப்படித்தான். அவன் தங்கத்திலே வாங்கிக் கட்டிக்கிட்டு இருக்கிறான்; இவன் வெள்ளியிலே வாங்கிக் கட்டிக்கிட்டு இருக்கிறான்; நான் அலுமினியத்திலே வாங்கிக் கட்டிக்கிட்டு இருக்கிறேன். பலன் எல்லாம் ஒண்ணுதான். எல்லோரும் பாசு பண்ணப் போறோம் பாருங்களேன்.

*தகப்பன்* : (அதிக கோபத்துடன்) அட மடப்பசங்களா உங்களுக்கு எந்த முட்டாப்பயல்டா சொன்னவன் இப்படிண்ணு.

*மகன்* : அப்பா எங்களை வேணும்னா திட்டிக்கோப்பா. வாத்தியாரைத் திட்டாதேப்பா. அவருதாம்பா எங்களைக் கூப்பிட்டு இரகசியமா சொல்லிக் கொடுத்து மாடன் கபே சுப்பராவ் கடையிலே வாங்கிக் கொடுத்தார். ஒரு நாளைக்கு எத்தனை விக்குது தெரியுங்களா; கேசுக்குப் போறவன், வக்கீலு, வண்டிக்காரன்னு ஒவ்வொருத்தனும் வாங்கிக் கட்டிக்கிட்டு போறாங்கோ, நம்ம வாத்தியாரு பஞ்சாபகேச சாஸ்திரிதானப்பா இதே தருவிச்சி கடைக்குக் கொடுத்து இருக்கிறாரு. மாடன் கபே சுப்பராவ் இந்த டாலர்களுக்கு பூஜை பண்ணி எடுத்துக் கொடுக்கிறாரு. அதுதான் இங்கே ரொம்ப விக்குது; திட்டாதிங்கப்பா, கட்டாயம் பாசு பண்ணிப் போடுவோம்.

*தகப்பன்* : ஏண்டா சண்டாளப் பசங்களா இப்படி எத்தனை நாளாய் நடக்குதுடா

*மகன்* : இந்த இரண்டு வருசமாகத்தான் மும்முரமா நடக்குதுங்கோ.

*தகப்பன்* : நீ எப்போ புடிச்சி கட்டிக்கிட்டு இருக்கிறே;

*மகன்* : போன வருசம் புடிச்சி கட்டிக்கிட்டிருக்கிறேம்பா.

*தகப்பன்* : பின்னை ஏண்டா போன வருஷம் நீ பாசு பண்ணாமே போயிட்டே

*மகன்* : அப்பா நான் இரண்டொரு பாடம் நல்லாக் கூடப் படிச்சேன். ஏன் பாசாகலே என்று வாத்தியாரைக் கேட்டேன். அவர் "நீ சாயிபாபா சாமியெ நம்பாமே படிச்செயல்லோ. அதனாலே சாமி சுழூச்சிப் போட்டது. இனிமேலேயாச்சும் அவரையே நம்பு" அப்படீன்னு



சொன்னாரு அதுவும் ரொம்ப ரகசியமாகச் சொன்னாரப்பா. அதுதான் நான் சாயிபாபாவையே நம்பிகிட்டு பூசை பண்ணிக்கிட்டு படிக்கா மையே இருக்கிறேனப்பா - எனக்குத் தங்கத்திலே சாயிபாபா வாங்கிக் குடுக்கிறீங்களா.

*தகப்பன்* : அடி செருப்பாலே; தேவடியா மகனே, அவனாருடா அந்த வாத்தியாரு என் வயிறு பத்திக்கிதுடா. நானு மாசம் மாசம் 30ரூ உன் எளவுக்கு அளுகிறது. நீ அந்தப் பலருக்குப் பொறந்த வாத்தியார் பையன் பேச்செக் கேட்டுக்கிட்டு ஊட்லே சோத்தைத் திண்ணுக்கிட்டு கழுதை மேச்சிக்கிட்டா திரியிறே.

கூப்பட்றா உங்கம்மாளை! அடி அடி கேட்டையா உம்மவஞ் சேதிய. எவனோ சாயிபாபாவாம். எங்கயோ இருக்கிறானாம். அவன் மூஞ்சிப்போட்ட ஒரு தகட்டெ இடுப்பிலே கட்டிக்கிட்டா பரிச்சையிலே பாசாயிடுமாம் அதைக் கட்டிக்கிட்டவுங்க படிக்கக் கூடாதாம். படிச்சா அந்த சாயிபாபா "நானிருக்க உனக்குப் பயமென்ன? என்னை நம்பாமே நீ படிச்சையா"ண்ணு கோவிச்சுக்கிட்டு பரிச்சையிலே சைபர் போட்டுடுமாம். அதனாலேதான் போன வருசம் அந்த பாபா இவனுக்கு சுளிச்சி போட்டதாமாம். அதுக் கோசரம் இந்த வருசம் களுதை மேக்கிறாண்டி பாத்தையா அந்த வாத்தியாருப் பயலே என்ன பண்ணக்கூடாதடி? பெத்தயேடி இவனை. இவனைப் பெக்கிற நேரம் பேதிக்கி குடிச்சிருந்தாலும் இரண்டு தரம் வயித்தாலே போயிருக்குமே. நல்ல கொளக்கட்டையாட்டமா இருந்துகிட்டு இப்படிப் பட்ட புள்ளையைப் பெக்கறே.

*தாயாரு* : கோவிச்சுக்காதிங்கோ! பையனுக்கு என்ன தெரியு முங்கோ; அந்தப் பாளாப்போன பட்டு கிடப்பான் அந்த வாத்தியார் நாயி பண்ணுனதுக்கு என்னையும் பையனையும் கோவிச்சி என்ன பண்ணறது. நானு இவனைப் பெக்கறத்துக்கு நீங்க ஒண்ணும் பண்ணாமே நாமத்திரமா இவனைப் பெத்தேன் உங்களுக்குந்தான் பங்குண்டு. வெளியே சொன்னா வெக்கக்கேடு வாய் மூடுங்கோ அந்த வாத்தியாரைக் காட்டுங்கோ இப்பவெ அவனைப் போயி இவ்வூடு கூட்ரதாலேயே நல்லா தூசிதட்டி உட்டுடுறேன்.

*மகன்* : அப்பா, அப்பா, வெளியே சொல்லாதிங்கப்பா. வாத்தியா ரையும் கேக்காதிங்கப்பா. வாத்தியாரு இதை ஒருத்தருக்கிட்டயுஞ் சொல்ல வேண்டாம். சொன்னாக்க இந்த வருசமும் பாபா சுளிச்சிப் போடுவாரு எண்ணு சொன்னாருங்கோ.

*தாயாரும் தகப்பனும்* : எனக்குத் தெரியும் ஏன் அவன் அப்படிச்சொன்னான் என்று, தெரிஞ்சா நான் என்ன பண்ணுவேன்னு அவனுக்குத் தெரியும். என்ன ஆனாலும் சரி. நீ பெயிலானாலுஞ் சரி; அந்த வாத்தியாருப் பயலையும் ஏமாத்தி அதை விக்கிற அந்த எச்சக்கலை காப்பிக் கடைக்காரனையும் ஒதைக்காமே விடப்போற தில்லை.

இனி நீ அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போகாதே. வூட்டிலேயே படி. வேறெவாத்தியாரு வைச்சுக் குடுக்கிறேன் என்று சொல்லிப் போட்டு கையில் ஆளுக்கொண்ணை எடுத்துகிட்டு வாத்தியாரைத் தேடிக்கிட்டுப் போறாங்கோ

நேரமாச்சி இன்னொரு நாளைக்குவந்து சொச்ச சங்கதியைச் சொல்லுகிறேன்.

குறிப்பு : இதில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பனவல்ல.



# 5. வெள்ளிக் கிழமை விளக்குவைத்த நேரம் !

*நகை வியாபாரி* : ஐயா! தாங்கள் என்னிடம் காலையில் காசுமாலை வாங்கி வந்தீர்களே அது தங்களுக்குத் தேவையா இல்லையா என்பதைத் தெரிந்து விட்டால் அதை வேறு ஒருவர் வேண்டுமென்று சொல்லி மத்தியானமிருந்து கடையில் காத்துக் கொண்டிருக்கிறார். அவருக்காவது கொடுத்து விடலாம் என்று வந்திருக்கின்றேன். எனக்குப் பணத்துக்கு மிகவும் அவசரமாயிருப்பதால் தயவு செய்து உடனே தெரிவித்து விடுங்கள்

*வைதீகர்* : செட்டியாரே! அந்த நகை தேவையில்லை. வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வரும்போது பூனை குறுக்கே போச்சுது. அப்பொழுதே வேண்டியதில்லை என்று தீர்மானித்து விட்டேன். வீட்டில் பெண்டுகள் பார்த்து மிகவும் ஆசைப்பட்டு மாலையில் உள்ள காசை எண்ணிப்பார்த்தார்கள். அதில் 68 காசுகளிலிருந்து, எட்டு எண்ணிக்கை கொண்டது எதுவும் எங்கள் குடும்பத்திற்கு ஆய்வருவதில்லை. அதனால் அவர்களும் உடனே கீழே போட்டு விட்டார்கள். அதனால் அது எங்களுக்கு வேண்டியதில்லை.

*நகை வியாபாரி* : அப்படியானால், தயவு செய்து கொடுத்துவிடுங்கள். வேறு ஒருவர் காத்துக்கொண்டிருக்கின்றார்.

*வைதீகர்* : ஆஹா, கொடுத்து விடுவதில் ஆட்சேபணையில்லை காலமே நேரத்தில் வாருங்கள் கொடுத்து விடுகின்றேன்.

*நகை வியாபாரி* : அவர் இன்று இராத்திரிக்கு ஊருக்குப் போகின்றவர் அதனால் தயவுசெய்து இப்பொழுதே கொடுத்து விடுங்கள்

*வைதீகர்* : செட்டியாரே தாங்களென்ன நாஸ்திகராய் இருக்கின்றீர்கள். வெள்ளிக் கிழமை. அதுவும் விளக்குவைத்த நேரம். இந்த சமயத்தில் நிறைந்த வீட்டிலிருந்து பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? அது லட்சுமி அல்லவா?

*நகை வியாபாரி* : என்ன அய்யா வியாபாரத்திற்காக பெண்டுகளுக்குக் காட்டிவிட்டுக் கொண்டு வருகிறேன் என்று எடுத்துக் கொண்டு வந்த நகையைக் கேட்டால். வெள்ளிக் கிழமை விளக்கு வைத்த நேரம் என்கிறீர்களே இது என்ன ஒழுங்கு? ஊரார் நகைக்கு நாள் என்ன நேரமென்ன என்பது எனக்கு விளங்கவில்லையே.

*வைதீகர் :* (தனக்குள்ளாகவே இந்த இளவு நகையை நாம் ஏன் இந்த மனிதனிடம் வாங்கி வந்தோம் என்று நினைத்துக் கொண்டு) என் புத்தியை விளக்குமாற்றால் புடைக்க வேண்டும். உம்ம கடைக்கு வந்ததே பிசகு; தவிரவும் உம்மிடம் நகையை எடுக்கும்போதே மணி பத்தரை இருக்கும். நல்ல ராகுகாலத்தில் எடுத்து வந்தேன். அது எப்படியானாலும் கலகமாய்த்தான் தீரும். எனக்குப் புத்தி வந்தது. இனி இந்த மாதிரி செய்யமாட்டேன். தயவுசெய்து நாளைக்கு வாருங்கள்.

*நகை வியாபாரி :* இது என்ன ஐயா, தமாஷ் செய்கிறீர்களா என்ன? உங்கள் நகையை யாராவது கேட்டால், நாள் கோள் எல்லாம் பார்த்துக் கொள்ளுங்கள், ஊரார் நகைக்கு இதெல்லாம் பார்க்கச் சொல்லி உங்களுக்கெவன் புத்தி சொல்லிக் கொடுத்தான்? அவனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள் அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்கின்றேன். மரியாதையாய் நகையைக் கொடுங்கள் நேரமாகுது.

*வைதீகர் :* நீங்கள் "குடி அரசு" பத்திரிகைக் கட்சியைச் சேர்ந்தவர்களா என்ன? நாளையும் கோளையும் சாஸ்திரத்தையும் கேலி செய்கின்றீர்களே; அந்தக் கூட்டத்திற்குத் தான் நல்லது இல்லை. கெட்டதில்லை. மேல்இல்லை. கீழ் இல்லை. கோவில் இல்லை, குளமில்லை, சாஸ்திரமில்லை, புராணமில்லை, பறையனும் பாப்பானும் ஒண்ணு என்று ஆணவம் பிடித்து நாஸ்திகம் பேசிக்கொண்டு திரிகிறார்கள். நீங்களும் அதுபோல் பேசுகின்றீர்களே.

*நகை வியாபாரி :* நீரே ரொம்பவும் ஆஸ்திகராயிருந்து கொள்ளும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. மரியாதையாய் நகையைக் கொடுத்துவிடும். பவுன் விலை இறங்கப்போகின்றது. இன்றைக்கு விற்காவிட்டால் எனக்கு நஷ்டம் வந்து விடும். வேறொரு ஆசாமியும் மிகவும் ஆசையாய் காத்திருக்கின்றார். இனி தாமதம் செய்யாதீர். இருட்டாகப் போகிறது. சீக்கிரம் எடுத்துக் கொண்டுவாரும்.

*வைதீகர் :* (வீட்டிற்குள் போய் சம்சாரத்துடன் யோசிக்கின்றார்) என்ன ஏன் பேசவில்லை? செட்டியார் காசுமாலை கேட்கின்றார்.

*அம்மா :* வெகுநேர்த்தி, இன்றைக்கு வெள்ளிக்கிழமை விளக்குவைத்த நேரம், லட்சுமியை வீட்டைவிட்டு வெளியில் கொடுக்கலாமா?

*புருஷன் :* எல்லாம் நான் சொல்லிப் பார்த்தாய் விட்டது. செட்டியார் ஒரே பிடியாய் இப்போதே கொடுத்தாக வேண்டும் என்று கட்டாயப்படுத்திக் கொண்டு வெளியில் காத்துக் கொண்டிருக்கிறார்.



*அம்மா :* (பலமாய் சத்தம் போட்டுக் கொண்டு வெளியில் வருகிறபோது பேசிக்கொண்டு வருவதாவது) "செட்டியாருக்குத்தான் புத்தியில்லை. உங்களுக்குமா புத்தியில்லை. அவர் என்ன செட்டியா? மட்டியா? வீடுவாசல் வைத்துப் பிழைத்த மனிதனா நாடோடித்தடம் போக்கியா? நிறைந்த வீட்டில் விளக்கு வைத்தநேரத்தில் கலகம் பண்ண வந்திருக்கிறாரா? நான் போய் கேட்கிறேன்?" என்று வெளியில் வந்து என்ன செட்டியாரே உமக்குப் புத்தியில்லையா? இப்போழுதுதான் ஏதோ கொஞ்சம் ஓஹோ என்று எங்கள் குடும்பம் தலை எடுக்கிறது. அதுக்குள் நீர் எமனாய் வந்த விட்டீர், கொள்ளையில் போய் விடுவீரா அல்லது ஏதோ ஒரு மனிதன் நகை வாங்க வந்தவன் காத்திருக்கிறான் என்கிறீரே அவன்தான் கொள்ளையில் போய் விடுவானா? உனக்குத்தான் புத்தியில்லா விட்டாலும் அவனுக்காவது புத்தியிருக்க வேண்டாமா. வெள்ளிக்கிழமை நகையைப் போய் கேட்கச் சொல்லலாமா என்கிற அறிவில்லாமல் உம்மை இங்கே அனுப்பி ரகளை பண்ணச் சொல்லி இருக்கிறானே. அத்தனை அவசரம் என்ன அவனைக் கொண்டுபோகிறது?

*(இச்சமயத்தில் மகன் வந்து விட்டான்)*

*மகன் :* என்ன அம்மா கூச்சல் போடுகிறாய், இவர் யார்?

தாயார் : இவரா, இவர் ஒரு நகை வியாபாரியாம்; இவர் தலையில் நெருப்பைக் கொட்ட வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் காசு மாலையைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டுமாம். ரகளைக்கி நிற்கிறார்.

*மகன் :* அதெல்லாம் இருக்கட்டும்; ஜாஸ்தி பேசாதே. நமக்குக் காசுமாலையேது? நம் வீட்டில் காசு மாலை இல்லையே. நேற்றுத்தானே அப்பா ஒரு காசுமாலை வாங்கவேண்டும் என்று பேசிக் கொண்டிருந்தார். அதற்குள்ளாகவா வாங்கி ஆய்விட்டது காசுமாலை?

*தாயார் :* உங்கப்பா யார் முகத்தில் முழித்தாரோ, இன்று காலையில் கடைக்குப் போனார்; இந்த செட்டியாரிடம் மாலை ஒன்று இருந்தது. அதை எனக்குக் காட்டுவதற்காக வாங்கிவந்தார். நேற்று நினைக்கும்போதே ராகு காலம் இன்று செட்டியார் கடையில் நகை வாங்கும் போதும் ராகுகாலம். வழியில் வரும்போதும் பூனை குறுக்கே போச்சுதாம். அப்பொழுதே உங்கப்பா வேண்டாமென்று தலைசுத்தியெறிந்துவிட்டு வரவேண்டாமா? அப்படிச் செய்யாமல் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார். அது கொஞ்சம் நன்றாய் இருந்தது நானும் ஆசைப்பட்டு வாங்கலாம் என்று முடிவுகட்டி

எண்ணிப் பார்த்தேன். காசு அறுபத்தி எட்டாயிருந்தது. உடனே தலையைச் சுற்றி எறிந்துவிட்டேன். உங்கப்பா பெட்டியில் வைத்துவிட்டார். இப்ப வந்து செட்டியார் அவசரப்படுகிறார். யாரோ வேறே கிராக்கி காத்துக் கொண்டிருக்கின்றதாம். வெள்ளிக்கிழமை, விளக்கு வைத்த நேரம் முதலாவது பெட்டியைத் திறக்கலாமா? நீயே சொல்லு பார்ப்போம்.

*மகன்* : ஐய்யோ! இதென்ன பெரிய அழுக்கு மூட்டையாயிருக்கிறது. குருட்டு நம்பிக்கைப் பிடுங்கலாயிருக்கின்றதே, வெள்ளியாவது, சனியாவது ராகுஆவது,கேது ஆவது? ஊரார் வீட்டுநகையை வாங்கிக்கொண்டு வந்து பெட்டியில் வைத்து பூட்டிக்கொண்டு வெள்ளியுஞ், சனியும் பேசுவது வெகு ஒழுங்காய் இருக்கின்றது. பேசாமல் எடுத்துக் கொண்டுவந்து கொடுத்துவிடு, இல்லாவிட்டால் பெட்டியை உடைத்து விடுவேன் தெரியுமா?

*(அதற்குள் அப்பா வந்து விட்டார்.)*

*அப்பா* : என்னடா பயலே, பலே அதிகப் பிரசங்கியாய்ப் போய்விட்டே! நான் அப்போதே உன்னை "குடி அரசு" பத்திரிக்கையைப் படிக்கவேண்டாம். கெட்டுப் போவாய் என்று சொன்னேனா இல்லையா? அதுபோலவே படித்துக் கெட்டுக் குட்டிச்சுவராய் போய்விட்டாயல்லவா? கர்மம். கர்மம். இந்த இழவுப்பத்திரிகை ஒன்று முளைத்து ஊரிலுள்ள சிறு பிள்ளைகளையெல்லாம் நாஸ்திகமாக்கி விட்டது.

*மகன்* : "வெகு நன்றாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு உடனே அம்மாள் இடுப்பில் சொருகி இருந்த சாவியைப் பிடுங்கிக்கொண்டு போய் பெட்டியைத் திறந்து நகையை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்து செட்டியாரை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான்,

புருஷனும் பெண்ஜாதியும்:- ராகுகாலத்தில் அந்த செட்டியிடம் நகை வாங்கிவந்ததே பிசகான காரியம். இதுவும் வரும் இன்னமும் எவ்வளவோ கெடுதியும் வரும். என்னை அடிக்க வேண்டும்...........லே என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள்.



# 6. கல்வியின் ரகசியம்

*(இரண்டு வைதீகப் பிராமணர் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்கள்)*

*கணபதி சாஸ்திரிகள்* : என்ன சுவாமிகளே சவுக்யம் தானே?

*லட்சுமண சாஸ்திரிகள்* : ஏதோ தங்கள் ஆசீர்வாதத்தால் சவுக்கியம்தான்.

*கணபதி சாஸ்திரிகள்*: குழந்தைகள் எல்லாம் க்ஷேமந்தானா?

*லட்சுமண சாஸ்திரிகள்*: அவைகளும் சிவ பெருமான் அந்த ரங்கநாதனுடைய கடாட்சத்தால் க்ஷேமமாகவே இருக்கின்றார்கள்.

*கணபதி சாஸ்திரிகள்*: குழந்தைகள் எல்லாம் படித்திருக்கிறதா?

*லட்சுமண சாஸ்திரிகள்*: படித்திருக்கின்றதுகள். ஆனால் அதற்காக நான் பட்ட சிரமம் இருக்கின்றதே அதுசாட்சாத் பகவானுக்குத்தான் தெரியும்.

*கணபதி சாஸ்திரிகள்*: என்ன அவ்வளவு கஷ்டம்?

*லட்சுமண சாஸ்திரிகள்*: அதையேன் கேட்கிறீர்; ஒன்றாவது என்னுடைய குமாரர்கள் பிராமண பிந்து என்றே சொல்ல முடியாது. சூத்திரபிந்து என்று தான் சொல்ல வேண்டும். படிப்பு விஷயத்தில் ஒன்றும் சரியான கவலை எடுத்துக் கொள்ளவேயில்லை. எந்நேரம் பார்த்தாலும் சூத்திரப் பையன்களோடே சேர்ந்து கொள்கிறது; சிகரெட்டு குடிக்கிறது; நாளெல்லாம் இப்படியே தான்; சீமைச்சாராயம் குடிக்கிறது; டிராமா ஆடப்போய் விடுகிறது; அவர்களின் ஒவ்வொரு பரீட்சைக்கும் நான் பட்டபாடு வெளியில் சொல்ல முடியாது.

*கணபதி சாஸ்திரிகள்*: அதென்ன விஷயம், பையன்கள் பரீட்சைக்குத் தாங்கள் என்ன பாடுபடுகிறது?

*லட்சுமண சாஸ்திரிகள்*: அதையேன் கேட்கிறீர்கள்? பரீட்சை வந்து விட்டால் எனக்குச் சாப்பிட நேரமில்லை, ஒன்று இரண்டிற்குப்

போகக்கூட நேரமில்லை.

*கணபதி சாஸ்திரிகள்:* என்ன அவ்வளவு கஷ்டம் ?

*லட்சுமண சாஸ்திரிகள்:* கஷ்டமா? சொல்லுகிறேன் கேளுங்கள் முதலாவது பரீட்சை காலம் வந்து விட்டால் பரீட்சைக்கேள்விகளைத் தெரிந்து வந்து பையன்களுக்குச் சொல்வதற்கு அலையும் அலைச்சல் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ஏதோ நம்மிடவாள் யூனிவர் சிட்டி முதலானதுகளில் பிரதானஸ்தானத்தில் இருப்பதனால் அவர்கள் தயவுக்குக்கட்டுப்பட்டு. பரீட்சைக்கேள்வி எழுதுகிறவர்கள் நம்ம பரிதாபத்தையும் பார்த்து ஜாடை மாடையாக இரண்டு ஒன்று சொல்லி விடுவார்கள். அதில் ஏதாவது கொஞ்சம் கஷ்டம் இருக்கு மானால், அச்சாபீசுக்காரர்களுக்குத் தக்க சிபாரிசு பிடித்து அங்கு ஏதாவது ஒன்று இரண்டு பரீட்சைக்காகிதம் பெற்றுக்கொள்கிறது. அதிலும் சரி யாய்க் கிடைக்காவிட்டால், பரீட்சை ஆன பிறகு பரீட்சை பேப்பர் களைத் திருத்தி மார்க்குப் போடுகிறார்களே அவர்களிடம்போய் கெஞ்சிக் கூத்தாடி மார்க்கு அதிகம் போடச் செய்கிறது. இப்படி யெல்லாம் கஷ்டப்பட்டு நாலுபிள்ளைகளையும் பீ.ஏ பாசாக்கி வைத்தேன்.

*லட்சுமண சாஸ்திரிகள்* : இதெல்லாம் சுலபமாக முடிகிறதா?

*கணபதி சாஸ்திரிகள்:* ஐயையோ சுலபமா? அது இன்னமும் வெட்கக்கேடு. எத்தனை பெரிய மனுஷாள் சிபாரிசு வேண்டியிருக்கிறது. ஒரு சமயத்தில் வைஸ்சான்சிலர் சிபாரிசு: மற்றொரு சமயத்தில் ஐகோர்ட் ஜட்ஜு சிபாரிசு; மற்ற ஒரு சமயம் எக்ஸிகியூடிவ் கவுன் சிலர் சிபாரிசு; மற்றொரு சமயம் அட்வகேட் ஜெனரல் சிபாரிசு; பல சமயம் எஜுகேஷனல் டிபார்ட்மெண்டில் இருக்கும் இன்ஸ்பெக்டர் முதலானவர்கள் சிபாரிசு. பிரசிடென்சி மேஜிஸ்ட்டேட் சிபாரிசு கூட ஒரு தடவை வாங்க நேர்ந்தது.

*கணபதி சாஸ்திரிகள்:* இவர்கள் எல்லாம் இதற்கு சம்மதிப்பார்களா?

*லட்சுமண சாஸ்திரிகள்:* இவர்களெல்லாம் பிராமணர்களா யிருக்கிறவர்களிடம் தானே நான் போவேன் சூத்திரனிடம் அவாள் யாராவது நேரில் கூப்பிட்டுச் சொன்னால் ஒழிய நான் போகவே மாட்டேன். சிலசமயத்தில் நம் வீட்டில் ஆம்பிடையாளை அனுப்புவது.

*கணபதி சாஸ்திரிகள்* : அவர்கள் போய் என்ன செய்வார்கள்?



*லட்சுமண சாஸ்திரிகள்:* என்ன செய்வது என்றா கேட்கிறீர்கள்? பெரிய அதிகாரிகள் வீட்டுப் பெண்களிடம் போய் அழுகிறது. அவாள் மனமி ரங்கி தங்கள் புருஷனுக்குச் சிபாரிசு செய்கிறது. இப்படித்தான், இந்தக் காலத்தில் பின்னேவேறு என்ன செய்வது? ஒரு தடவை பாருங்கோ கேட்க வேடிக்கையாயிருக்கும்; நம்ம இரண்டாவது பையன் ஃபிசிக்ஸ் என்கிற பாடம் எடுத்துக்கொண்டான்; ஃபிசிக்ஸ் என்கிற வார்த்தை அவன் வாயிலும் நுழையாது, எழுத்துத்தப்பில்லாமல் எழுதவும் தெரியாது. சூத்திர சாவகாசம் தானே. பிராமண வாக்கு எப்படி வலுக்கும். இப்படியிருக்க பரீட்சை வந்துவிட்டது. என்னுடைய தைரியத்தில் பையன் புஸ்தகம் கூடவாங்கவில்லை. புஸ்தகத்திற்குக் கொடுத்த பணத்தை சிகரெட்டு குடிக்கவும், மில்டரி ஓட்டலுக்குப் போகவும், செலவு பண்ணி விடுகிறது. நான் என்ன செய்கிறது? நம்ம அய்யர் வாள் காலில் போய் விழுந்தேன். அவர் சம்சாரம் ரொம்ப நல்லவாள். சாஸ்திரிகளே, சாஸ்திரிகளே இப்படிப் பண்ணலாமா? எழுந்திருங்கோ என்று சொல்லி உங்களுக்கு என்ன குறை என்று கேட்டார்கள். உண்மையைச் சொன்னேன். உடனே ஒரு சீட்டு எழுதி ஒருவரைத் தருவித்தார்.

அவர் வந்ததும் இதைச் சொன்னார். உடனே அவர் என்னைச் சாயந்திரம் அய்ந்து மணிக்குத் தன் வீட்டுக்கு வரச் சொன்னார். அந்தப்படியே நான் அங்கே போனேன். ஓர் காகிதம் என்னிடம் கொடுத்து இதைப் பார்த்து எழுதிக் கொண்டே திரும்பக் கொண்டுவந்து கொடுத்துவிடும்படிச் சொன்னார். அப்படியே செய்தேன். அப்படியிருந்தும் நம்ம பையன் பரீட்சைக்குப் போய் வந்து தான் பரீட்சையில் சரியாய் எழுதவில்லை என்று சொல்லிவிட்டான். பின்னே அவர் வீட்டுக்குப் போய் அழுதேன். அவருக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்கிறேன் கேளுங்கள்.

*அவர்* : என்னையா பரீட்சை பேப்பர் கொடுத்துக் கூட உங்களால் எழுத முடியாவிட்டால் என்ன செய்கிறது.?

*நான்* : எப்படியாவது தாங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.

*அவர்* : இப்படியே எவ்வளவு பேருக்கு நான் செய்வது?

*நான்* : அப்படியா? இன்னம் யாருக்குச் செய்கிறீர்கள்.

*அவர்* : பிராமணப் பையன்கள் எல்லோருக்கும் தான் ஏறக்குறைய செய்துகொண்டு வருகிறேன்.

*நான்* : சூத்திரப் பிள்ளைகளுக்கும்கூட செய்வதுண்டா?

*அவர்* : அவர்களுக்கும் கூடத்தான் செய்து வருகிறேன். ஆனால் மார்க்குப் போடுவதில்லை. சுழித்துக் கொண்டு வருகிறேன்.

*நான்* : அவர்களும் தங்களிடம் வருகிறார்களா.

*அவர்* : என்னிடம் வருவதில்லை. நானாகவே அவர்களுக்கு சுழித்துவிடுவது; ஏனென்றால் வருஷத்தில் 100க்கு இத்தனை பிள்ளைகளைத்தான் பாசாக்க வேண்டும்; என்கிற ஒரு கணக்கு எங்களுக்குள் உண்டு; அது எங்கள் கமிட்டியில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வோம்; அந்த கணக்குக்குப் பிராமணப் பிள்ளைகளையே சரிப்படுத்தி விடுவேன்; பேருக்கு சில சூத்திரப்பிள்ளைகளையும் போடுவேன்; ஆனால் அவன்கள் நம்ம பிராமணப் பிள்ளைகளையெல்லாம் எடுத்து விழுங்கும்படியான மணிப்பயல்களாய் இருப்பான்கள். வெகு பிள்ளைகள் சூத்திரப் பிள்ளைகள் சரியாய் எழுதியிருந்தால் கூட நான் சுழித்துவிடுவேன். நம்மை ஏய்ப்பதற்காகவே அந்தப் பிள்ளைகள் ஜாதி கண்டுபிடிக்க முடியாதபடி மீனாட்சி சுந்தரம், வேணுகோபாலன், நஞ்சப்பன் என்று எழுதுவார்கள். அப்படி ஏதோ ஜாதி தெரியக் கூடாத இரண்டொரு சூத்திரப்பிள்ளைகள் தவிர, மற்றதுகளுக்கு நான் சுலபத்தில் மார்க்குப் போட மாட்டேன். அப்படி இருந்தாலும் வரவர அதுகள் படிக்க ஆரம்பித்துவிட்டதுகள். கீழ்ப்பள்ளிக் கூடங்களிலும் உபாத்தியாயர்கள் போடும் மார்க்குகளுக்கும் தகுந்த படி சொல்லி வைத்திருக்கிறோம். கூடுமான வரையில் சூத்திரப் பிள்ளைகளுக்கு மார்க்குப் போடாமலும், கண்டிப்பாய் மேல் வகுப்புக்கு அனுப்பாமலும், இருக்கும்படி செய்திருக்கிறது. சூத்திரப் பணக்காரன்கள் வீட்டுப் பிள்ளைகள் வந்தால் கண்டிப்பாய் அதுகளைக் சுழித்துவிடச் சொல்லுகிறோம். அவர்கள் தகப்பன்மாரைக் கூப்பிட்டும் உங்கள் பிள்ளை படிக்காது. அதற்கு படிப்பும் வராது வேறு வேலையில் போடு என்று சொல்லி விடும்படியும் செய்கிறோம். அதிலும் எஸ்.எஸ்.எல்.சி பாசாகவே நாங்கள் விடுவதில்லை. அதிலும் தப்பித்தவறிப் பாசாகி எஃப்.ஏ வகுப்புக்கு வந்துவிட்டால் கண்டிப்பாய் (0) சுழிதான் போடுவது.

*நான்* : அதேன் பணக்காரர்கள் வீட்டுப் பிள்ளைகள் படித்தாலென்ன?

*அவர்* : அய்யோ அது நமக்குப் பெரிய ஆபத்து அல்லவா? பணமும் படிப்பும் இரண்டும் அவர்களுக்கு ஏற்பட்டுப் போனால், நம் கதி அதோகதிதான். எப்படியாவது உத்யோகம் சம்பாதித்துக் கொள்வார்கள்; முன்னுக்கு வந்துவிடுவார்கள். பிறகு நமக்கு அது பல வழிகளிலும்



கஷ்டமாய்தானிருக்கும். பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள் அரைப் படிப்போடு இருந்தால்தான் நமது பிழைப்புக்கு அனுகூலமுண்டு. அதுகள் படிக்காமலும் இருக்கக் கூடாது. 6வது ஃபாரம் வரைக்கும் படிக்க விட வேண்டும். அப்படி இருந்தால் தான் பள்ளிக்கூடங்களும் நடைபெறும். அவர்கள் சம்பளத்தில் நம்ம பிள்ளைகளும் படிக்கலாம். அந்தப் பிள்ளைகளும் குடும்பங்களைக் கவனியாமல் வீணாய்ப் பணத்தைச் செலவு செய்யும் வழியும் கற்றுக் கொள்ள சுலபமாகும். நம்மவர்களில் படிக்காத மற்ற பிள்ளைகளும் அவர்களுக்கு பிரைவேட் செகரெட்டரியாய் இருந்து கொண்டு காலங்கழிக்க முடியும் இந்தப் படிப்பு என்கிற தந்திரம் ஒன்றினால் தான் பிராமணர்களாகிய நாம் பிழைக்கிறோம். அதுவும் இல்லாவிட்டால், நாம் பழைய ஆரியர்களாகத்தான் வாழ வேண்டும்.

*நான்* : அப்படியா படிப்பில் இவ்வளவு ரகசியம் இருப்பது எனக்குத் தெரியவே தெரியாது. பகவான் உங்களை சிரஞ்சீவியாய் வைத்திருக்க வேண்டும். நான் போய் வருகிறேன்.

*அவர்* : நமஸ்காரம்.

*கணபதி சாஸ்திரிகள்:* ஆசீர்வாதம் சொல்லிவிட்டு வந்தவிட்டேன் இவ்வளவு பண்ணின பிறகு நம்ம பையன் செகிண்டு கிளாசில் பாசானான் மற்ற பிள்ளைகளைப் பற்றி நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன். தாங்களே யோசித்துப் பாருங்கள்

*கணபதி சாஸ்திரிகள்:* அப்படியா சரி நம்மகள் வயிற்றுப் பேரன் இரண்டு வருடமாய் எஃப்ஏ வகுப்பில் தவறிவிட்டான் இவ்வருஷம் அவனுக்கு ஏதாவது செய்ய முடியுமா?

*லட்சுமண சாஸ்திரிகள்:* முன் போலே இருந்தால் நிமிஷத்தில் செய்ய முடியும். இப்பொழுது வர வர சூத்திரன்கள் ஆதிக்கமாய் போய் விட்டது. பிராமண அதிகாரிகள் கொஞ்சம் பயப்படுகிறார்கள். ஆனாலும் முடியாத காரியமல்ல அவன் பெயர் என்ன?

*கணபதி சாஸ்திரிகள்:* கருப்பசாமி.

*லட்சுமண சாஸ்திரிகள்:* சரி சரி அது தான் அவன் இரண்டு வருஷம் தவறிப் போய்விட்டான். பஞ்சாபகேசன் என்றாவது பிரணதார்த்திரிகரன் என்றாவது சந்தேகிக்க முடியாதபடி பிராமணப் பெயர் வையுங்கள். கண்டிப்பாய்ப் பாசாக்கி வைத்து விடுகிறேன்.

*கணபதி சாஸ்திரிகள்* : சரி உங்கள் பிள்ளைகளெல்லாம் என்ன செய்கிறார்கள்?

*லட்சுமண சாஸ்திரிகள்* : பெரியவாள் ஆசீர்வாதத்தால் அதில் ஒன்றும் குறைவில்லை. ஆளுக்கொரு வேலையில் தான் இருக்கிறார்கள். பெரியவன் சால்ட் சர்க்கிள் இன்ஸ்பெக்டராயிருக்கிறான். அடுத்தவன் போலீசு இன்ஸ்பெக்டராயிருக்கிறான். மூன்றாமவன் காங்கிரசின் பேரால் க்ஷேமமாய் இருக்கிறான். நாலாமவன் வக்கீலாயிருக்கிறான்.

*கணபதி சாஸ்திரிகள்* : அப்படியா மேற்படி உத்தியோகங்களில் அவர்கள் எல்லாம் எப்படி விளங்குகிறார்கள். அல்லாமலும் காங்கிரசின் பேரால் க்ஷேமமா யிருக்கிறான் என்று சொன்னீர்களே அது என்ன?

*லட்சுமண சாஸ்திரிகள்* : கேட்பதற்கு அது மிகவும் வேடிக்கையாகத் தான் இருக்கும், சந்தி வேளையாயிற்று. அனுஷ்டானம் செய்து விட்டு வந்து சொல்லுகிறேன்.

*கணபதி சாஸ்திரிகள்* : நானும் போய் அனுஷ்டானம் செய்துவிட்டு வருகிறேன். இந்த லௌகீகங்கள் எல்லாம் எனக்குக் கேட்க ஆசையாயிருக்கிறது.

*லட்சுமண சாஸ்திரிகள்* : அப்படியானால் இன்னும் எவ்வளவோ சங்கதியிருக்கிறது; தாராளமாய்ச் சொல்லுகிறேன்.

*கணபதி சாஸ்திரிகள்* : உத்தரவு கொடுக்க வேண்டும். நிலா வெளிச்சம்தானே. சாப்பிட்டுவிட்டு வருகிறேன். பேசிக் கொண்டிருக்கலாம். நமஸ்காரம் போய் வருகிறேன்.

*லட்சுமண சாஸ்திரிகள்* : சரி அப்படியே அவசியம் வாருங்கள்



# 7. எல்லாப்பெண்களும் கற்பில்லாதாவர்களா?

*ஆஸ்திகப்பெண்* : என்ன அய்யா நாஸ்திகரே! மனு தர்ம சாஸ்திரத்தில் மற்ற விஷயங்களைப்பற்றி ஆட்சேபணைகள் எப்படியிருந்தாலும் பெண்களைக் கடவுளே விபசாரிகளாய்ப் பிறப்பித்து விட்டார். ஆதலால் அவர்கள் விஷயத்தில் ஆண்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டுமென்று சொல்லியிருப்பது மாத்திரம் பெரிய அயோக்கியத் தனம் என்பதே எனது அபிப்ராயம். அது விஷயத்தில் நான் உங்களுடன் சேர்ந்து கொள்ளுகிறேன்.

*நாஸ்திகன்* : அம்மா! அப்படித் தாங்கள் சொல்லக்கூடாது. மனுதர்மசாஸ்திரத்தில் மற்ற எந்த விஷயங்கள் அயோக்கியத்தனமாக இருந்தாலும் இந்த விஷயத்தில் மனு தர்மசாஸ்திரம் சொல்லுவதை நீங்கள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

*ஆஸ்திகப் பெண்* : அதென்ன அய்யா நீங்கள் கூட அப்படிச் சொல்லுகின்றீர்கள்? இது தானா உங்கள் அறிவு இயக்கத்தின் யோக்கியதை? எல்லாப் பெண்களுமா விபசாரிகள்?

*நாஸ்திகன்* : ஆம் அம்மா எல்லோருமே தான் "விபசாரிகள்" இதற்காக நீங்கள் கோபித்துக் கொள்ளுவதில் பயனில்லை.

*ஆஸ்திகப் பெண்* : என்ன அய்யா உலகத்தில் உள்ள பெண்கள் எல்லோரையுமா நீங்கள் விபச்சாரிகள் என்று நினைக்கிறீர்கள்?

*நாஸ்திகன்* : ஆம்.ஆம். ஆம். இந்த உலகத்தில் உள்ள பெண்கள் மாத்திரமல்ல மேல் உலகத்தில் உள்ள பெண்களையும் கூடத்தான் நான் "கற்பு உள்ளவர்கள்" என்று சொல்லுவதில்லை.

*ஆஸ்திகப் பெண்* : இப்படிச் சொல்லுவது தர்மமாகுமா?

*நாஸ்திகன்* : கடவுளால் உண்டாக்கப்பட்ட வேதத்தின் சாரமான மனுதர்மசாஸ்திரம் சொல்லுவது எப்படிப் பொய்யாகும். அதர்மமாகும்? சொல்லுங்கள் பார்ப்போம். வேண்டுமானால் அது சரியென்று நான் ருஜூப்படுத்தவும் தயாராய் இருக்கிறேன்.

*ஆஸ்திகப் பெண்:* என்ன ருஜு? நாசமாய்ப்போன ருஜு? சற்று காட்டுங்கள் பார்ப்போம்.

*நாஸ்திகன் :* நமது பெரியவர்கள் கற்பைப் பரீட்சிக்கத் தக்க பரீட்சைகள் வைத்திருக்கின்றார்கள், ஆதலால் அவர்களை நாம் சுலபத்தில் ஏமாற்றிவிட முடியாது.

*ஆஸ்திகப் பெண்:* என்ன பரீட்சை அய்யா அது?

*நாஸ்திகன் :* சொல்லட்டுமா கோபித்துக்கொள்ளக் கூடாது.

*ஆஸ்திகப் பெண்:* கோபமென்னயா; மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயம். தாராளமாய்ச் சொல்லுங்கள்.

*நாஸ்திகன் :* தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை! என்கின்ற பொய்யா மொழிப் புலவரின் வேதவாக்கை கேட்டிருக்கிறீர்களா?

*ஆஸ்திகப் பெண்:* ஆம் கேட்டிருக்கிறேன்.

*நாஸ்திகன் :* கற்புடைய மங்கையர்கள் மழை பெய்யென்றால் பெய்யும் என்கின்ற வேதவாக்கையும் கேட்டிருக்கின்றீர்களா.

*ஆஸ்திகப் பெண்:* ஆம் கேட்டிருக்கிறேன்.

*நாஸ்திகன் :* சரி ....... ஊரில் மழை பெய்து மூன்று வருஷமாச்சுது குடிக்கத் தண்ணீர் கிடையாது. தயவு செய்து ஒரு இரண்டு உழவு (2 அங்குலம்)மழை பெய்யச் சொல்லுங்கள் பார்ப்போம்.

*ஆஸ்திகப் பெண்:* இது நம்மாலாகின்ற காரியமா? தெய்வத்திற்கு இஷ்டமிருந்தாலல்லவா முடியும்? இந்த ஊர்க்காரர்கள் என்ன அக்கிரமம் பண்ணினார்களோ! அதனால் இந்தப்பாவிகள் மழை இல்லாமல் தவிக்கின்றார்கள்.

*நாஸ்திகன் :* எந்தப் பாவி எப்படித் தவித்தாலும் நீங்கள் கற்புள்ளவர்களாயிருந்தால் மழை பெய்யென்றால் பெய்து தானே ஆக வேண்டும். அல்லது இந்த ஊரில் ஒரு கற்புள்ள பெண்ணாவது இருந்தால் மழை பெய்து தானே தீர வேண்டும். எப்போது பெண்கள் சொன்னால் மழை பெய்வதில்லையோ அப்போதே பெண்களெல்லாம் கற்புள்ளவர்கள் அல்ல; விபசாரிகள் என்று ருஜுவாக வில்லையா?



பொறுமையாய் யோசித்துப் பாருங்கள் இதையெல்லாம் நான் சொல்லவில்லை. வேதங்களும் சாஸ்திரங்களும் சொல்லுகின்றன. ஆகையால் இனிமேல் சாஸ்திரங்களைப்பற்றி சந்தேகப்படாதீர்கள். அதிலும் ரிஷிகளும் முனிவர்களும் சொன்னவாக்கியமும் கடவுள் சொன்ன வேதத்தின் சத்தாகியதும் இந்து மதத்திற்கு ஆதாரமானதும் மோட்சத்திற்கு சாதகமானதுமான மனுதர்மசாஸ்திரம் பொய்யாகுமா? அதனால்தானே நான் கூட கல்யாணம் செய்து கொள்ளவில்லை.

*ஆஸ்திகப் பெண்:* எதனால்தான்?

*நாஸ்திகன் :* பெண்களைக் கல்யாணம் செய்து கொண்டால் புருஷன்மார்கள் அவர்கள் விபசாரித்தனம் செய்யாமல் ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டுமென்று மனுதர்மசாஸ்திரத்தில் இருக்கிறதினால் தான்.

*ஆஸ்திகப் பெண்:* பின்னை என்ன செய்கின்றீர்கள்

*நாஸ்திகன் :* கடவுளோ பிறவிலேயே பெண்களை விபசாரிகளாய்ப் பிறப்பித்து விட்டார் யார் காப்பாற்றிப் பார்த்தும் முடியாமல் போய் விட்டது. சாஸ்திரங்களின் நிபந்தனைப் படி ஒரு சொட்டு மழைக்கும் வழியில்லை. கற்பு உள்ள பெண் என்று தெரிவதற்கு மனித முயற்சியை மீறிய, நடக்க முடியாத காரியங்களைச் செய்து காட்ட வேண்டுமென்று கதைகளும் எழுதிவைத்திருக்கிறார்கள். மழை பெய்ய வைப்பளும், வாழைத்தண்டை எரிப்பவளும், சூரியனை மறைப்பவளும் இரும்புக்கடலையை வேகவைப்பவளுமே பத்தினிகள் என்று "லைசன்ஸ்" பெறமுடிகிறது ஆதலால் எவனோ கட்டிக்கொண்டு காப்பாற்றட்டும். கடவுள் செயல் பிரகாரம் நமக்கு கிடைப்பது கிடைக்கட்டும், என்பதாகக் கருதி சிவனே என்று உட்கார்ந்து கொண்டிருக்கிறேனே, மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றமாட்டானா, என்கின்ற தைரியம் உண்டு.

*ஆஸ்திகப் பெண்:* அப்படியானால் நீங்கள் முன் சொல்லிக் கொண்டிருந்ததில் ஒன்றும் குற்றமில்லை. இந்த மனு தர்ம சாஸ்திரமும் வேதமும் பொய்யாமொழியும் நீதியும் இவற்றை உண்டாக்கியதோ அல்லது ஒப்புக்கொண்டதோ ஆன கடவுளர்களும் நாசமாய் போகட்டும், இனிமேல் இந்த ஆஸ்திகம் நமக்கு வேண்டவே வேண்டாம் நமது எதிரிகள் நாட்டுக்கும் வேண்டாம்.

# 8. எது ஜீவ காருண்யம் ?

## பார்ப்பனனுக்கும் சைவனுக்கும் சம்பாஷணை

*சைவன்:* ஓய்! என்னாங்காணும் அய்யரே, நீர் இப்போது மாமிசம் சாப்பிடுகின்றீரே. என்ன இப்படி கெட்டுப்போய் விட்டீர்

*பார்ப்பனன் :* வாரும் வாரும் பிள்ளைவாள், எனக்கு வரவர ஜீவஹிம்சை என்றால் சற்றும் பிடிப்பதே இல்லை. இன்றைக்குச் சாகின்றோமோ, நாளைக்குச் சாகின்றோமோ, இதற்குள் ஏன் அநியாயமாய் பல ஜீவன்களை ஹிம்சை செய்ய வேண்டுமென்பதாகக் கருதியே இனிமேல் காய்கறிகள் சாப்பிடுவதில்லை என்று தீர்மானித்து மாமிசம் சாப்பிடத் துணிந்துவிட்டேன்.

*சைவன்:* என்னங்காணும் பார்ப்பனரே. ஜீவ ஹிம்சை கூடாதென்றீர். அதற்காக மாமிசம் சாப்பிடுகின்றேன் என்கின்றீர். இது என்ன போக்கிரித் தனம்? அல்லவா?

*பார்ப்பனன் :* கோபித்துக்கொள்ளாதீர் ஐயா! நீர் சைவரல்லவா? உமக்கு வெறும் கோபந்தான் வருமேயொழிய விஷயம் புலப்படுவது தான் கஷ்டம்.

*சைவன்:* என்ன பார்ப்பனக் குறும்பை நம்மிடம் காட்டுகிறாய். பார்ப்பான் மாமிசம் சாப்பிட்டுத்தான் இந்த நாடு பாழாச்சுது.

*பார்ப்பனன் :* இந்த நாடுதான் பார்ப்பனன் மாமிசம் சாப்பிட்டு பாழாச்சுது சரி; வெள்ளைக்கார நாடு என்ன சாப்பிட்டு நல்லா ஆச்சுது? தவிரவும் இந்தியாவில் உள்ள 43 கோடி மக்களில் மாமிசம் சாப்பிடுகின்றவர்கள் எத்தனை பேர் சாப்பிடாதவர்கள் எத்தனை பேர் என்பது உமக்குத் தெரியுமா 10 கோடி முகமதியர் மாமிசம் சாப்பிடுகிறார்கள். ஒரு கோடி கிருஸ்தவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். 10 கோடி தீண்டாதார் என்கின்றவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள் க்ஷத்திரியர் என்கின்றவர்களில் சிங்கு க்ஷத்திரியர், மராட்டா க்ஷத்திரியர், நாடார் க்ஷத்திரியர், வன்னிய க்ஷத்திரியர், ஆகியவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வைசிய வகுப்பாரில் வாணிய வைசியர் மாமிசம் சாப்பிடுகிறார்கள்.

நாட்டுக்கோட்டை தன வைசிய வகுப்பார்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். வேளாளர்களில் கொங்கு வேளாளர்கள், கார்காத்த வேளாளர்கள், உடையார் வேளாளர்கள், மறவ வேளாளர்கள்,





படைத்தலை வேளாளர்கள், வடுக வேளாளர்கள், நாட்டார் வேளாளர்கள், ஆகியவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள். திருநெல்வேலி, தஞ்சாவூரில் உள்ள சில வேளாளர்கள் அவர்களைச் சேர்ந்த வெளியில் உள்ள சிலர் தவிர மற்ற எல்லா வேளாளர்களும் மாமிசம் சாப்பிடுகிறார்கள். கடைசியாக பிராமணர்கள் என்பவர்களிலோ, சௌராஷ்டிரப்பிராமணர்கள், விஸ்வப் பிராமணர்கள், சாலிய பிராமணர்கள், கொங்கிணி பிராமணர்கள், கவுடப் பிராமணர்கள், காஷ்மீரப் பிராமணர்கள், மச்சப் பிராமணர்கள், அம்பஷ்டப் பிராமணர்கள், முதலிய பல பிராமணர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள்.

இந்தியாவில் இவர்கள் எண்ணிக்கைகளையெல்லாம் சேர்த்தால் குறைந்தது 15 கோடிக்குக் குறையாது. அடியோடு மாமிசம் சாப்பிடாதவர்கள் சுமார் 2 கோடி இருக்கலாமா என்பது சந்தேகம். 43 கோடியில் 2 கோடி அதாவது 100க்கு ஐந்து பேராகலாம். தவிர இந்தியர் தவிர உலக மக்கள் எல்லோரும் மாமிசம் சாப்பிடுகின்றார்கள். எனவே மொத்த ஜனத்தொகையில் 100க்கு 99 1/2 பேர்களை ஜீவகாருண்ய மற்றவர்கள் என்று நீர் சுலபத்தில் சொல்லி விட முடியுமா? சொல்லும் பார்ப்போம்.

*சைவன்:* என்னங்காணும் பார்ப்பனரே! நீர் மாமிசம் சாப்பிடுகின்றீரே. இது யோக்கியமா? என்றால் ஊர்க்கதையெல்லாம் பேசுகிறீர்.

*பார்ப்பனன் :* சொல்லுவதை கவனமாய்க் கேளும் சைவரே, வெறுங்கோபம் ஒரு காசுக்கும் உதவாது. அதெல்லாம் அந்தக்காலம். இது அறிவு ஆராய்ச்சி சையன்ஸ் காலம் தெரியுமா? நான் மாமிசம் சாப்பிடக் கூடாது என்று நினைத்து வெகு நாளாய் சாப்பிடாதிருந்தது உண்டு. அது எதற்காக என்றால் ஜீவகாருண்யத்தை உத்தேசித்துத் தானே ஒழிய வேறில்லை. பிறகு இத்தனை பேர்கள் மாமிசம் சாப்பிடுவதைக் கணக்குப்பார்த்து உலகத்தில் 100க்கு 99 1/2 பேருக்கு ஜீவகாருண்ய மில்லாமல் இருக்குமா? இப்படி ஒரு கடவுள் மக்களை பிறப்பித்திருப்பாரா என்று யோசித்து யோசித்து மயங்கிக் கிடந்தேன்.

கடைசியாக திரு. ஜகதீச சந்திரபோஸ் மரம், கொடி, செடி, புல்பூண்டு ஆகியவைகளுக்கு உயிர் இருக்கின்றது அவைகளை தொட்டாலும், வாடினாலும் முறித்தாலும், பறித்தாலும், கஷ்டப்படுகின்றன என்பதைக் கண்டுபிடித்த பிறகுதான் சரி, எது ஜீவகாருண்யம்? என்பதை ஆராயப்புகுந்தேன்.

காய்கறிகள் சாப்பிடுவதை விட மாமிசம் சாப்பிடுவது அதிகமான ஜீவகாருண்யம் என்பதாக உணர்ந்தேன். எப்படி என்றால் உயிர் இருப்பதால் அது ஜீவனாகின்றது. ஜீவனை வதைத்துச்

சாப்பிடுவது மாமிசமாகின்றது. ஆகவே, ஒரு செடியின் தழைகளைக் கிள்ளிப் பிடுங்கும் போது காய்களை அறுக்கும்போது கிழங்குகளைப் பறித்து வாட வைக்கும் போதும், அவைகள் படும் பாடு சித்திர வதைக்கு ஒப்பாகிறது என்று போஸ் சொல்லுகிறார். எனவே ஒரு ஜீவனை தினந்தினம் பல தடவை வதை செய்து அதை துன்புறுத்து கின்றோம் என்பதை உணர நேரிட்டது. இப்போதும் இதை நினைத்தால் சகிக்க முடியாத துக்கம் வருகிறது. ஆனால் மாமிசம் அப்படியல்ல. ஒரு ஜீவனை சாப்பிடுவதனால் ஒரு தடவைக்கு மேல் யாரும் தொந்திரவு செய்யமாட்டார்கள். அதுவும் க்ஷணத்தில் முடிந்து போகும் ஆதலால் தான் கிழங்கு கீரை, காய் கறிகளைவிட மாமிசம் சாப்பிடுவது ஜீவகருண்யமாகும் என்று சொன்னேன். ஆதலால் ஓய்சைவரே! நான் உம்மை விட குறைந்த ஜீவகாருண்ய முடையவன் என்று எண்ணி விடாதீர். தவிர திரு.போஸ் காய்கறிகளுக்கு உயிர் இருப்பதை இன்று கண்டு பிடித்தார். ஆனால் மாமிசம் சாப்பிடும் மக்கள் வெகு காலத்திற்கு முன்பே கண்டுபிடித்துத்தான் மாமிசம் சாப்பிடுகின்றார்கள் என்பதாகத் தெரிகின்றது அன்றியும் வேதமும் மனுதர்ம சாஸ்திரமும் கண்ணப்பநாயனாரை ஒப்புக்கொண்ட சைவப்புராணங்களும் இதை அறிந்துதான் மாமிசத்தை அனுமதித் திருப்பதோடு மாமிசத்தை மறுக்கும் பிராமணன் இருபத்தொரு தலை முறைக்கு நரகத்தை அடைவான் என்று மனுதர்ம சாஸ்திரமும் வேதமும் கூறுகின்றன தெரிந்ததா? சைவரே.

*சைவன்:* ஓய் ஓய் பார்ப்பனரே, சரிதான் கடையை கட்டுங்காணும் உம் ஆராய்ச்சியையும் சயன்சையும் சாஸ்திரத்தையும் வேதத்தையும் புராணத்தையும் கோட்டை அடுப்பில் வைத்துக் கொளுத்தும், என்றைக்கு ஆராய்ச்சியும் சையன்சும் உலகத்தில் தோன்றிற்றோ அன்றே எல்லாம் கெட்டுது. கடைசியாக முழு முதற்கடவுளான சிவன் தலையில் கை வைக்கவும் வந்து விட்டது. இந்தப்பாழும் அறிவும் ஆராய்ச்சியும் சயன்சும் என்றைக்கு ஒழியுமோ அன்று தான் சைவம் தழைக்கும். ஆதலால் இவை ஒழிய தவம் கிடப்போம். போம்.போம் பார்ப்பானே போம். உம்மை பார்த்ததற்கும் உம் பேச்சைக் கேட்டதற்கும் கண்களையும் காதுகளையும் கழுவவேண்டும்.

*பார்ப்பனன் :* அய்யா சைவரே, நன்றாய் தவம் கிடங்கள் அதுவும் திரு.ஜகதீஸ் சந்திர போசும் இயற்கை ஆராய்ச்சியும் சுயமரியாதை இயக்கமும் ஒழியட்டும் என்று தவம் கிடங்கள். இதில் எது மீதியானாலும் உங்கள் சைவமும், உங்கள் ஜீவகாருண்யமும் சிறிது கூட நிலைக்காது தவிர என்னைப் பார்ப்பதற்கும் என் பேச்சுக்களைக் காதில் கேட்டதற்கும் மகாபாதகந்தீர்த்த குளத்தில் போய்க் குளியுங்கள் கழுவினால் மாத்திரம் போதாது.

குறிப்பு : இது *16-6-29* குடி அரசில் வெளியான கட்டுரை



# 9. பஞ்ச கன்யாஸ்மரே

பார்ப்பன பாகைஷயில் ஒரு தோத்திரம் ஸ்லோக முண்டு. என்னவென்றால் "அகல்யா துரோபதி, சீதா, தாரா, மண்டோதரி, ஸ்மி தா பஞ்ச கன்யாஸ்மரே நித்யம் மகா பாதக நாசனம்" இதன் கருத்து அகல்யை, துரோபதை, சீதை, தாரை,மண்டோதரி, ஆகிய ஐந்து கன்னிகைகளை தினம் நினைத்தால் மகாபாதக மெல்லாம் நாசமாகிவிடும் என்பதே. இதில் ஏற்பட்ட விவகாரத்திற்காகத்தான் "ஐந்துக்கு இரண்டு பழுதில்லை" என்கிற பழமொழி உண்டாக்கப் பட்டது. விவகாரத்தின் தன்மையாவது:

கோபமில்லாமல் பகுத்தறிவோடு கேட்க வேண்டும். ஏனென்றால் கோபம் வந்தால் பார்ப்பான் ஏமாற்றி விடுவான். கோபமில்லா விட்டால் தான் அதிலிருக்கும் இரகசியம் விளங்கும். நான் கிளப்பப்போகும் விவாதம் இந்த ஸ்லோகத்தை எந்தப்பார்ப்பான் எழுதினானோ அந்தப்பார்ப்பான் எழுதிவைத்த சங்கதியைத்தான் சொல்லப்போகிறேன். ஆதலால் நான் என் உத்தேசப்படி சொல்லப் போவதாக நினைத்து ஏமாந்து போகாதீர்கள். இதில் கண்டிருப்பது வாஸ்தவமா இல்லையா என்று ஒவ்வொரு பார்ப்பானையும் கேளுங்கள். வாஸ்தவமல்ல என்று சொன்னால் என்னைக் கேளுங்கள். முதலாவது அந்த ஸ்லோகத்தில் மேல் கண்ட ஐந்து பெண்களையும் கன்னிகைகள் என்று குறிப்பிட்டிருக்கிறது. கன்னிகை யென்றால் கலவியறியாதவள்; அதாவது புருஷர்கள் சகவாசம் தொடங்காதவள்; கல்யாணமில்லாதவள் என்று பொருள். ஆகையால் அந்த ஸ்லோகம் முன்னுக்குப்பின் முரணானது என்று சொல்வேன்.

ஒரு சமயம் பார்ப்பனர்கள் இதற்கு இந்த ஸ்லோகத்தில் மேற்படி பெண்களைக் குறிப்பிட்டு நினைக்கும்படி சொன்னதன் கருத்து கன்னித்தன்மையை உத்தேசித்தல்ல; அவர்களுடைய கற்புத் தன்மையைப் பற்றி என்று சமாதானமாகச் சொல்ல வருவார்களானால் அதைப்பற்றிச் சற்று யோசிப்போம்.

இந்த ஐந்து பெண்களையும் நான் 1.தாரை 2. அகலியை 3.துரௌபதை 4.சீதை, 5.மண்டோதரி என்கிற வரிசையில் எடுத்துக் கொள்கிறேன்.

முதலாவது தாரை ; தாரையென்பவள் தேவகுருவாகிய பிரகஸ்பதி யினுடைய பெண்சாதி. இந்தம்மாளைப் பற்றிய விஷயமறிவதற்கு கட்டுசாதங் கட்டிக்கொண்டு காதங்காதமாய் ஊர்ப்பயணம் போக வேண்டியதில்லை. இன்றைக்குத் தெருத்தெருவாய் தாரையும் சந்திரனும் படுத்து உருளுவதும், நிர்வாணமாய் நின்றுகொண்டு எண்ணெய்த் தேய்ப்பதுமான சத் காலட்சேபத்தைத் தினந்தினம் பார்த்து வருகிறோம். தாரையம்மன் புருஷனே சங்கதி தெரிந்து இரண்டு பேருக்கும் சாபமி ட்டதும். இவர்கள் இரண்டு பேருக்குமாகப் பிறந்த குழந்தை புதன் என்பவன் இருப்பதும் மேற்படிப் பார்ப்பனர்கள் சாஸ்திரங்களிலேயே இருக்கிறது.

ஆகவே குருவின் யோக்கியதை குரு பத்தினியின் யோக்கியதை, சிஷ்யனின் யோக்கியதை, ஆசிரமத்தின் யோக்கியதை ஆகிய இவ்வளவுக்கும் தாரையம்மாள் உதாரணமாக விளங்குகிறாள். இதையெல்லாம்விட கற்பின் லக்ஷணத்திற்கும் இது ஓர் அரிய இலக்கிய மாய் விளங்குகின்றது.

இரண்டாவதான அகலிகையம்மாள் விஷயம்; அகல்யை யம்மாள் என்பவள் கௌதம முனிவர் என்கின்ற ஒரு ரிஷியின் பெண்டாட்டி, தெய்வ இராஜனான இந்திரன் இந்தம்மாள் மேல் ஆசைப்பட்டு மாறுவேஷம் பூண்டு வீட்டிற்குள் நுழைந்ததாகவும், பிறகு ஒருவருக்கொருவர் இன்னார் என்று தெரிந்து கொண்டு இரண்டு பேரும் சுகித்ததாகவும், ரிஷி இந்த விஷயம் தெரிந்து இருவரையும் தண்டித்ததாகவும், அத்தண்டனையால் இந்திரனுக்கு சரீரமெல்லாம் பெண்குறியாகவும், அகலியை கல்லாக ஆய்விட்டதாகவும் பார்ப்பன சாஸ்த்திரங்கள் என்பவைகளே சொல்லுகின்றன. அதுவும் தெருவில் போகின்ற சாஸ்த்திரங்கள் சொல்லவில்லை. அய்ந்தாம் வேதம் என்று சொல்லப்படுவதாகிற இராமாயணம், பாரதம் முதலியவைகளில் தான் இந்த உண்மைகள் சொல்லப் படுகின்றன. இதனால் தேவர்களின் அரசனின் யோக்கியதையும் ரிஷிப்பத்தினிகளின் யோக்கியதையும் விளங்குகின்றது.

மூன்றாவது துரௌபதியம்மன் சங்கதி இந்தம்மாள் முதலில் ஒரு புருஷனை மட்டும் கட்டிக் கொண்டு பிறகு மாமியார் இஷ்டப்படி மற்றும் நால்வருக்கும் பெண்டாட்டியாக இருந்து வந்திருக்கிறாள். ஐந்து பேரிருந்தும் ஆசை தீராமல் இன்னொரு புருஷனையும் மனதில் நினைத்து நினைத்து வருந்தி இருக்கிறாள் என்பதைத் தானே ஒப்புக்கொண்டதல்லாமல் உலகப் பெண்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டுமானால், ஆண்மக்களே இருக்கக்கூடாது என்றும் தீர்ப்புக் கூறிவிட்டாள். இதனால் அக்காலக் கற்புக்கு லக்ஷணம் புருஷனும்,





மாமியாரும் யாரிடம் போகும்படி சொன்னாலும் போய்த்தான் ஆக வேண்டும் என்பதும் பிறகு தன்னிஷ்டப்படி யாரை ஆசைப்பட்டாலும் அதுவும் கற்புடன் சேர்ந்தது தான் என்பதும் அக்கால வழக்கத்தில் இருந்ததாக விளங்குகிறது. ஆகவே ஐந்து கன்னிகைகளில் மூன்று பேர் சங்கதி இப்படி இருக்கிறதேயென்று கேட்கப்படும் கேள்விக்குத்தான் பார்ப்பனர்கள் 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என்று சொல்ல அதிலிருந்து இந்தப்படி பழமொழி எழுந்தது.

இந்த இரண்டில் ஒன்றும் குற்ற மில்லையா என்று பார்த்தால் அதிலும் ஒன்றைக் கழிக்க வேண்டியதாகத் தானிருக்கிறது. அடியோடு கழிக்காவிட்டாலும் சந்தேகத்திலாவது வைத்துத்தான் தீரவேண்டியதாக இருக்கிறது.

நான்காவதான சீதையம்மாள் சங்கதியைப் பார்த்தால் முன் சொன்ன கதைகளின்படி அவ்வளவு இல்லாவிட்டாலும் உத்தம ஸ்தீரீ என்றோ, முழுவதும் பரிசுத்தமானவள் என்றோ கற்புக்கரசியென்றோ சொல்வதற்கில்லை. குண விசேஷத்தைப்பற்றியோ வென்றால், மாயமானைத் துரத்திக் கொண்டு இராமர் போன காலத்தில் வெகு நேரம் வரை திரும்பிவராதது கண்டு புருஷனைப்போய்ப் பார்த்து வரும்படி சீதை லட்சுமணனுக்குச் சொல்ல, இராமர் எப்படியும் திரும்பி வருவார் என்று சொன்னதற்கு அண்ணன் செத்தால் என்னைக் கைப்பற்றலாம் என்று பார்க்கிறாயா என்று சொன்னதிலிருந்தே லட்சுமணனிடம் பழகிய சீதைக்குப் போதிய அறிவும், உயர்குணமும், விஷயத்தை அறியும் சக்தியும் இல்லையென்ற தத்துவம் நன்றாய் விளங்குகின்றது. தவிர, சீதையிடம் வெகுகாலம் நன்றாய்ப் பழகி அவள் புருஷனாகிய இராமனும் சீதையின் கற்பில் சந்தேகப்பட்டி ருக்கிறான். அதாவது இராவணனைக் கொன்றபின் சீதையை முதல் தடவையாக சந்தேகப்பட்டபோது சீதையிடம் என்ன சொல்கின்றான் என்றால் ஏ சீதை நான் உன்மீது ஆசைப்பட்டு உன்னை மீட்டுக் கொண்டு போவதற்காக இராவணிடம் யுத்தம் செய்யவில்லை. பின் என்னவென்று கேட்பாயானால் ஒருவன் பெண்சாதியை மற்றொருவன் அடித்துக் கொண்டுபோய் விட்டால் அவனைச் சும்மா விடுவது வீரனுக்கு அழகாகுமா என்கிற ரோசத்தின் மேல் தான் சண்டைபோட்டு அவனைக் கொன்றேன். மற்றப்படி ஒரு துஷ்டன் வீட்டில் அதுவும் அவனுடைய அதிகாரத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் அடங்கி 10 மாதம் வசித்த தன் பெண்சாதியைச் சுய மரியாதையுள்ள எவனாவது மறுபடியும் சேர்த்துக்கொள்வானா? என்று சொன்னதோடல்லாமல், அவனுடைய சுவாதீனத்திலிருந்த நீ, அவனுக்கு வசப்படாமலிருந்திருக்க முடியுமா? ஆதலால் நீ எங்கே வேண்டுமானாலும் உன்னிஷ்டப்படி போகலாம். உன்னைநான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். "கோபத்தால்

சொல்லவில்லை நெடுநேரம் ஆலோசித்துச் செய்த முடிவு இது" என்று சொன்னான்.

இந்த இடத்தில் ராமன் உலக அபவாதத்திற்குக் கட்டுப்பட்டு இப்படிச் சொல்லவில்லை. தானே சந்தேகப்பட்டு ஒரு வித முடிவுக்கு வந்து சொல்கிறான் என்று தான் அர்த்தம். அதோடு பத்து மாதம் எதிரி வீட்டில் வசித்த நீ, என்பதால் இதுவரை உயிரை வைத்திருந்தாயே என்கின்ற கருத்துத் தொக்கி இருக்கிறது.

இதற்குச் சீதை சொல்லும் பதில் என்னவென்றால், ஏ ராமா நீ சொல்வது உண்மையா? அதற்கு நான் என்ன செய்யக்கூடும்? நானோ ஒரு பெண். ஒண்டியாயும் அனாதையாயும் இருந்தவள். இராவணனோ இராட்சசன்; அளவற்ற பலசாலி. என்னால் கூடியவரை தடுத்துப் பார்த்தேன். எனக்கு எள்ளளவாவது அவனுடன் போகவேண்டும் என்று ஆசை இருந்ததா? விதியை நோக வேண்டியதே தவிர என்னைக் குற்றஞ் சொல்லக்கூடாது. என் தேகம் தான் பிறருக்கு வயப்பட்டதே ஒழிய என் ஹிருதயம் அப்பொழுதுக்கப்பொழுதும் உன்னிடத்திலேயே இருக்கின்றது. சுதந்திர மற்ற நான் என்ன செய்ய முடியும்? அனுமானை அனுப்பி நானிருக்குமிடத்தையும் ஸ்திதியையும் அறிந்து வரச்சொன்ன திலிருந்து நான் இலங்கையில் இராவணன் வீட்டில் இருப்பதாக தெரிந்தவுடனே என்னை ஏன் தள்ளிவிடவில்லை என்று சொன்னாள். (இது வால்மீகி இராமாயணம் யுத்தகாண்டம் 117.118-வது சருக்கத்தில் காணப்படுவது) இந்த இடத்தில் இராமன் சீதையைப் பார்த்து நீ கற்பழிந்து விட்டாய் என்று நான் தீர்மானித்து விட்டேன் என்று வெளிப்படையாய் சொல்லிக் காட்டியதற்கு சீதையேன் அப்படி யொன்றும் நடக்கவில்லையென்று தைரியமாகச் சொல்லியிருக்கக் கூடாது என்கிற கேள்விக்குப் பதில் இல்லை. அதோடு என் சரீரம் அவன் வயப்பட்டு விட்டது. ஆனால் அப்போதும் என்மனம் உன்னிடம்தான் இருந்தது. விதியை நோக வேண்டுமேயொழிய என்னை நோகக்கூடாது. இராவணன் வீட்டில் இருந்ததையும் என் ஸ்திதியையும் அனுமன் பார்த்து விட்டுவந்து சொல்லி இருப்பாரே; அப்போதே ஏன் என்னைத்தள்ளி விட்டதாகச் சொல்லியனுப்பவில்லை என்பதாக வெல்லாம் சொல்வதனால் விஷயம் சந்தேகத்திற்காவது இடமுண்டா கிறதா இல்லையா என்பதை யோசித்துப்பாருங்கள். ஒரு சமயம் இராவணன் மீது அதிகமான பழியைச் சுமத்த வேண்டும் என்றே இப்படி வால்மீகி எழுதி இருக்கக்கூடும் என்று சொல்வதானால் அதுவேறு விஷயம் என்னவென்றால் அது இராவணனைப்பற்றிப் பேசும்போது கவனிக்கவேண்டிய விஷயம்.

தவிர மற்றொருதடவை வண்ணான் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு கொஞ்சம்கூட முன்பின் யோசிக்காமல் திடீரென்று





லட்சுமணனை விட்டுவந்ததும் அங்குசீதை தன்கற்பைப் பற்றி யார் என்ன சொல்லிவிடப் போகின்றார்களோ என்று பயந்து "லட்சுமணா, இதோபார் இப்பொழுது கர்ப்பமாக இருக்கிறேன், என்று சொன்னதும் காட்டில் இரட்டைக்குழந்தை பெற்றதாக ஒரு இராமாயணத்திலும், தர்ப்பை கிள்ளிப்போட்டு வால்மீகி ஒரு பிள்ளையை உண்டாக்கினார் என்று மற்றொரு இராமாயணத்திலும் சொல்லப்பட்டாலும் இந்தப் பிள்ளைகளை இராமன் ஒப்புக்கொள்ளாமல் வால்மீகி முதலிய எவ்வளவோ பெரிய தவசிரேஷ்டர்கள் என்பவர்கள் பிராமணம் செய்தும் ஒப்புக்கொள்ளாமல் மறுபடியும் நெருப்பில் இறங்கும்படிச் சொன்ன தும், அதற்குச் சீதை கட்டுப்படாமல் உலக அபவாதத்தையோ, இராமனுடைய சந்தேகத்தையோ தீர்க்க வேண்டாமா என்கின்ற கவலையில்லாமல் பூமியைப் பிளக்கச் செய்து பூமியில் இறங்கி மறைந்து விட்டாள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இன்னமும் என்னென்னமோ இருந்தாலும் எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு இதுவே போதும்.

எனவே சீதையின் விஷயமானது சந்தேகப்படுவதற்கில்லாமல் போகவில்லை என்பதோடு, சீதையின் லட்சுமித் தன்மையும், இராமனின் விஷ்ணுத் தன்மையும் எப்படிப்பட்டதென்று விளக்கவும், ஆரியர் பழக்க வழக்கங்களும், அக்கால ஆண்பெண்கள் வாழ்க்கை நிலைமைகளை விளக்கவும் உதவுகிறது.

கடைசியாக மீதி இருப்பது அய்ந்தாவதான மண்டோதரி அம்மாள், இந்த அம்மாள்; விஷயத்தில் ஒரு தகறாரையும் காணோம் கம்பஇராமாயணத்தில், புருஷன் செத்துவிட்டான் என்கிற சங்கதி தெரிந்தது அழுது உயிர் விட்டதாகக் காணப்படுகிறது. தவிரவும் செத்துப்போன இராவணனைப்பார்த்து அழும்போது சீதை குலத்தி லாவது, ரூபத்திலாவது, குணத்திலாவது சாமர்த்தியத்திலாவது என்னை விட சிறந்தவளா என்று மாத்திரம் கேட்டிருக்கின்றார்கள். இது சீதையின் குணத்தை 10 மாதம் நேரிலிருந்து பார்த்தவள் கேட்டிருப்பதால் இதில் மண்டோதரி பேரில் குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால் சீதையின் குணம்தான் வெளியாக்கப்பட்டதாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆதலால் மண்டோதரியின்மேல் குற்றம் சொல்ல இடம் இல்லை; கற்புள்ளபெண் என்று சொல்லலாம் ஆனால் இது திராவிடர் சிறப்பிற்கும் இலக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.

பொதுவாகப் பஞ்ச கன்னிகைகளின் யோக்கியதையைப் பார்க் கின்ற போதும் அரசன், ரிஷி, கடவுள் என்கின்றதைப் பார்க்கின்ற போதும் நன்றாக இருந்தால் இதன் ஆபாசங்கள் விளங்குவதோடு அய்ந்துக்கு இரண்டு சுத்தமாய்த் தேருகின்றதா வென்பது வெளியாகும்.

முதலாவது விஷயம், குருபத்தினி சங்கதியையும் இவனின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இந்த இரண்டாவது விஷயம் தேவர்களுக்கெல்லாம் அரசனாயிருப்பவன் யோக்கியதையும், பத்தினியின் யோக்கியதையையும் வெளியாக்கிற்று. இந்த இரண்டு விஷயங்களும் புருஷர்களால் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்பதையாவது காட்டிற்று மூன்றாவது விஷயமே புருஷனும் ஒப்புக் கொண்டான் மாமியும் ஒப்புக்கொண்டார்கள். உலகமும் ஒப்புக் கொண்டது என்பதைக் காட்டிற்று நாலாவது விஷயம். அவதாரங்கள் என்பதன் யோக்கியதையையும் வெளியாக்கிற்று.

மிஞ்சியது இராட்சதர்கள் என்றும், இராட்சதஸ்திரீகள் என்றும் ஆரியர்கள் எப்பேர்ப்பட்டவர்களைச் சொல்லுகிறார்கள்? சொல்லி வந்திருக்கின்றார்கள் என்பதையும் ஒரு திராவிடப் பெண்ணின் கற்பின் நிழலுக்குள் ஆரியர்கள் எப்படி வந்து கலந்து கொள்ளுகின்றார்கள் என்பதையும் வெளியாக்கிற்று. இந்தப் பழமொழி ஒன்று உலகத்தை ஏமாற்றச் செய்திருக்க வேண்டும் அல்லது இது அவர்கள் பழக்க வழக்கமாக இருக்க வேண்டும். ஆகவே அய்ந்துக்கு இரண்டுகூட அவர்கள் சொற்களில் உண்மை இருந்தால் அதுவும் நம்முடைய விஷயங்களில் தான் என்பதும் இந்த விஷயத்தினால் வெளிப் படுத்துகின்றேன்.



# 10. ஆசிரியர் – மாணாக்கன் –சம்பாஷணை கெடுவான் கேடு நினைப்பான்

*இராமாயண வகுப்பு ஆசிரியர் :-* டேய் ஆரியசங்காரா!
*ஆரியசங்காரன் :* அய்யா வணக்கம்.

*இராமாயண வகுப்பு ஆசிரியர் :* நமது இராமாயண காவியத்தில் இருந்து கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கு ஏற்ற சரியான சம்பவம் ஒன்று எடுத்துச் சொல்லு.

*ஆரிய சங்காரன்:* அய்யா, ஒரு நல்ல பொருத்தமான சம்பவம் ஒன்று என் ஞாபகத்திற்கு வருகிறது சொல்லுகிறேன்.

*இராமாயண வகுப்பு ஆசிரியர் :* சொல்லு பார்ப்போம்

*ஆரிய சங்காரன்:* இராமாயண காவியத்தில் வரும் தசரதனும் இராமனும் “கெடுவான் கேடு நினைப்பான்” என்பதற்கு சரியான எடுத்துக் காட்டு அய்யா.

*இராமாயண வகுப்பு ஆசிரியர்:* என்னடா ஆரியசங்காரா, நீ சுத்த முட்டாளாக இருக்கிறாய். இராமாயண கதா நாயகர்களாகிய தசரத சக்கரவர்த்தியையும் இராமபகவானையும் பற்றியா இப்படிச் சொல்லுகிறாய்?

*ஆரிய சங்காரன்:* நான் சொல்வது தவறல்ல அய்யா. தாங்கள் சொல்லுவதுதான் கதைக்கு மாறாக, கருத்துத்தவறாக இருக்கிறது. முதலாவது தசரதன் சக்ரவர்த்தி அல்ல. அவன் ஒரு சிற்றரசனே, இராமன், ஒரு பகவானே அல்ல கதைப்படி அவன் மிக்க கீழ்த்தரமான மனிதனே ஆவான். பார்ப்பனர்கள் அவர்களது கெட்ட குணங்களை மறைத்து அவர்களுக்கு இல்லாத தன்மைகளை ஏற்றிப்புளுகி மக்களை ஏமாற்றுகிறார்கள்.

*இராமாயண வகுப்பு ஆசிரியர் :* அப்படியானால் கெடுவான் கேடு நினைப்பான் என்ற பழமொழிக்குத் தசரதனும், ராமனும் எப்படி எடுத்துக் காட்டு ஆவார்கள் சொல்லுப்பார்போம்.

*ஆரிய சங்காரன்:* சுருக்கமாகச் சொல்லுகிறேன். பிறகு விளக்கம் காணலாம் தசரதனும் இராமனும் பரதனை வஞ்சித்துக் கெட்ட எண்ணத்துடன் அயோத்தியை இராமன் ஆளும் படிச் சூழ்ச்சி செய்தார்கள் அந்தக் கெட்ட எண்ண சூழ்ச்சியின் விளைவு தசரதன் உயிரை விட்டான். இராமன் பெண்டாட்டியைவிட்டான், முடிவில் நாட்டை இராவணன் மக்களுக்கு விட்டான்.

*இராமாயண வகுப்பு ஆசிரியர் :* அட,அட, பாவி, என்னடா இப்படி பேசுகிறாய். உன் நாக்கில் புற்று நோய்வராதா?

*ஆரிய சங்காரன்:* அய்யா ஏன் கோபிக்கிறீர்கள்? தாங்கள் இராமாயண வகுப்பு ஆசிரியர் ஆயிற்றே, தாங்கள் இராமாயணம் படித்திருப்பீர்களே.

அயோத்தியா நாடு யாருக்குச் சொந்தம்? எதற்கு ஆக இராமனுக்குப் பட்டம் கட்டுவது? எதற்கு ஆக இராமன் அதை ஏற்றுக் கொள்ளுவது? தசரதன் சூதாக வஞ்சக எண்ணத்துடன் இராமனுக்குப் பட்டம் கட்ட முயற்சிக்கிறான். இராமன் கெட்ட எண்ணத்தோடு வஞ்சகனாக இருந்து நாடு பரதனுக்குச் சொந்தம் என்று தெரிந்தே பட்டம் கட்டிக் கொள்ளச் சம்மதிக்கிறான். இதன் பயனாய் இராமன் காட்டுக்குத் துரத்தப்பட்டான், தசரதன் உயிர் விட்டான், காடு சென்ற இராமன் தன் மனைவியை இராவணனுக்குப் பின்னால் செல்லும்படி விட்டான். இராவணன் சீதைக்கு பிள்ளை கொடுத்து குசன், லவன் என்று இரு பிள்ளைகளைப் பெறச் செய்தான்.

இராமன் செத்தபின்பு நாட்டை இந்த இராவணன் பிள்ளைகள் ஆண்டார்கள். இதில் அய்யா அவர்கள் எதைத் தவறு என்கிறீர்கள்?

ஆதலால் கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கு வால்மீகி இராமாயணக் கதைப்படி தசரதனும் இராமனுமே சரியான பொருத்தமான எடுத்துக்காட்டு ஆவார்கள்.



# 11. அய்யங்கார் ஆசிரியர் – தமிழ் மாணவன் உரையாடல்

## வணக்கம் என்று சொன்னால் கருப்புச்சட்டையாம்

*ஆசிரியர் தசரதராம அய்யங்கார் :* டேய் தமிழரசா!
*தமிழரசன் :* அய்யா, வணக்கம்

*ஆ.த.ரா அய்யங்கார் :* என்னடா புதிதாக வணக்கம் கிணக்கம் என்று ஆரம்பிச்சிட்டே நீ என்ன கருப்புச் சட்டையில் சேர்ந்து விட்டாயா?

*தமிழரசன் :* அப்படி ஒன்றும் இல்லை அய்யா நாங்கள் பள்ளி மாணவர்கள் நேற்று ஒரு கூட்டம் போட்டு தமிழை வளர்ப்பது எப்படி என்பதைப்பற்றிப் பேசினோம்; அதில் தமிழர்கள் கூடுமானவரை தமிழிலேயே பேசிப்பழக வேண்டும் என்று தீர்மானித்தோம்; அதனாலே இனிமேல் ‘சார்’ என்பதற்குப் பதிலாக அய்யா என்றும் ‘நமஸ்தே’ என்பதற்குப் பதிலாக ‘வணக்கம்’ என்றும் சொல்லுவது என்பதாக முடிவு செய்து கொண்டோம். அவ்வளவுதானுங்க இதில் கருப்புச்சட்டையுமில்லை கதர்சட்டையுமில்லிங்கோ தமிழன் தமிழில் பேச வேண்டும் என்கின்ற ஒரே சட்டை (கவலை) தானுங்கோ

*ஆ.த.ரா அய்யங்கார் :* அப்படியானால் நாம் பேசும் எல்லா வார்த்தைக்கும் தமிழிலேயே வார்த்தைக் கண்டு பிடித்துப் பேச முடியுமா நம்மால்?

*தமிழரசன்:* ஏன் முடியாதுங்கோ? தமிழனுக்கு தமிழிலேயே பேசமுடியாது என்றால் வெட்கமல்லவா? தமிழனுக்குத் தமிழன் பேசிக் கொள்ள சொற்கள் இல்லை என்றால் அது இரட்டிப்பு வெட்கமில்லிங்களா?

*ஆ.த.ரா அய்யங்கார் :* ஓஹோ, அப்படின்னா கூந்தலுக்கு இன்னா தமிழ்ச் சொல்?

*தமிழரசன்:* மயிர்

*ஆ.த.ரா அய்யங்கார் :* ஸ்தனத்திற்கு?
*தமிழரசன்:* முலை

*ஆ.த.ரா அய்யங்கார்:* கர்ப்பம் என்பதற்கு?

*தமிழரசன்* : சினை

*ஆ.த.ரா அய்யங்கார்* : இந்த வார்த்தைகள் மக்கள் இடையில் பேசுவதற்கு அசிங்கமாக இருக்காதா ?

*தமிழரசன்:* அசிங்கம் என்ன வந்தது? இந்த சொற்கள் திருவள்ளுவரால் உலகில் சிறந்த இலக்கியமாகிய குறளில் பல தடவை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அப்படி இருக்க நம் சொற்களை நாமே இழிவாய்க் கருதிக் கொண்டு அன்னிய சொற்களைப் பயன்படுத்துகிறோம். அதாவது சில வகுப்பினர் தங்கள் வகுப்புத் தமிழ்ப் பெயரை இழிவாகக் கருதிக் கொண்டு தாங்களே மாற்றித் தங்கள் வகுப்புக்கு இழிவு தருவது போல் நடப்பதுதான் இழிவாகும்.

மற்றும் தெரியாத சொற்களுக்கு போனால் போகட்டும் என்று விட்டு விடலாம்; தெரிந்த சொற்களுக்கு ஏன் வேற்றுச் சொற்களைச் சொல்ல வேண்டும். அப்படிச் செய்வது தமிழன் தமிழையே இழிவு படுத்துவது போல் ஆகவில்லையா?

*ஆ.த.ரா அய்யங்கார்* : சரி.சரி பெரிய தமிழபிமானியாக ஆகிவிட்டாய். ஒரே நாளில் இவ்வளவு மாறி விட்டாயே?

*தமிழரசன்:* ஒரே நாளில் ஒன்றும் ஆகிவிட வில்லைங்கோ, விளக்கை வைத்தால் உடனே வெளிச்சம் ஆகிப்போகுது இதற்கு எத்தனைநாள் ஆகவேணும்.

*ஆ.த.ரா அய்யங்கார்* : சரி,சரி இந்தத் தமிழ் அன்பில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை இதற்காக மற்ற மொழிகள் மீது துவேஷம் வேண்டாம் என்பது தான் என் ஆசை?

*தமிழரசன்:* வெறுப்புக் கூடாது என்பதுதான் எங்கள் எண்ணம் ஆனால் நமஸ்தே என்பதற்கு வணக்கம் என்று சொன்னாலேயே அதை வெறுப்பு என்று கருதினால் அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? இப்பொழுது தாங்களே நான் வணக்கம் என்று சொன்னவுடனேயே கருப்புச்சட்டையா? என்று கேட்டு விட்டீர்களே, இதை தாங்கள் சாகிற வரையில் மறக்கமாட்டீர்களே, இப்போது நான் வேறு பள்ளிக்குத்தானே போக வேண்டியவனாக இருக்கிறேன். இங்கிருந்தால் என்னைத்தாங்கள் தலையெடுக்க வொட்டாமல் அழுத்தி விடுவீர்கள்.



*ஆ.த.ரா அய்யங்கார்* : என்ன தமிழரசா. இப்படி நினைக்கிறாய் இதையெல்லாம் மறந்துவிடு, நீ நல்லபையன் உன்மீது எனக்கு மிக அன்பு தெரியுமா?

*தமிழரசன்:* தெரியும் அய்யா, நான் இப்போதே மறந்து விடுவேன். அய்யா அவர்கள் தான் மறக்கவேமாட்டார்கள். எப்படியோ ஆகட்டும். தாங்கள் என்னை வணக்கம் என்றால் கருப்புச்சட்டை என்று நினைக்கிறபோது இனி நான் இந்தப்பள்ளிச்கூடத்தில் அரை நிமிஷம் கூட இருக்கமாட்டேன். அருள்கூர்ந்து சர்ட்டிஃபிகேட் கொடுங்கள் நான் வேறு எங்காவது போய்ச் சேர்ந்து படித்துக் கொள்கிறேன்.

*ஆ.த.ரா அய்யங்கார்* : சரி. இன்றைக்கே சர்ட்டிஃபிகேட் வாங்கிக் கொள். நீ இங்கிருந்தால் மற்ற பிள்ளைகளையும் கெடுத்து விடுவாய். உன் மீது தப்பு இல்லை. இப்பொழுது கிளம்பி இருக்கும் துவேஷப்படிப்பில் உன்னை இப்படிப் பேசும்படி செய்து விட்டது. நீ படிப்பில் நிரம்பவும் கெட்டிகாரப் பையன் கெட்ட சகவாசத்தால் இப்படி ஆகி விட்டாய். இந்த எண்ணத்தோடு நீ இனி எங்கு போனாலும் உருப்படி ஆகமாட்டாய்.

*தமிழரசன்:* நான் உருப்படி ஆகமாட்டேன் என்று சொன்னதற்கு நன்றியோடு வணக்கம் அய்யா. நான் உருப்படி ஆகி என்ன ஆகவேண்டும்? உருப்படி ஆகாமல் போனால் தமிழுக்கு தமிழனுக்கு உழைக்க வாய்ப்புக் கிடைக்கும் தாங்கள் சொன்னதை நல்வாக்காகக் கொண்டு இனி எந்தப் பள்ளிக்கும் போவதும் இல்லை. வெளியில் போனதும் கருப்புச் சட்டை தைத்துப் போட்டுக் கொண்டு தமிழ் வாழ்க, தமிழ் வாழ்க எதிரிகள் ஒழிக என்று தொண்டாற்றப் போகிறேன். நன்றி.

# 12. தீபாவளி தத்துவமும் இரகசியமும்

*( தீபாவளி பற்றி ஓர் அறிய ஆராய்ச்சி உரையாடலைக் கீழே தருகிறோம். பாமரர்களில் பல்லாயிரவர் உண்மை தெரிந்து வெறுத்துத் தள்ளியுள்ள "தீபாவளியை"ப் படித்த கூட்டத்தார் கூடக் கொண்டாடுகிறார்களே! அதுதான் வெட்கக்கேடு "சைவர்"கள் என்பவர்கள் கூடக் கொண்டாடுகிறார்களே. அது இன்னும் பெரிய வெட்கக்கேடு எல்லோருமே இதைப் பார்க்கட்டும்)*

*டேவிஸ் :* டேய், ராமானுஜம் .......... எங்கேடா போகிறாய் ?

*ராமானுஜம் :* எங்குமில்லை பிரின்ஸ்பாலைப் பார்த்து எனக்கு இரண்டு நாள் லீவ் கேட்கப் போகிறேன்.

*டேவிஸ்:* எதற்கு லீவு?

*ராமானுஜம் :* 21-ம் தேதி பண்டிகை லீவு, 22-ஆம் தேதி சனிக்கிழமை 23-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆக 3 நாள் காலேஜ் இல்லை. இன்னும் ஒரு இரண்டு நாள் அதை ஒட்டி லீவு கிடைத்தால் ஊருக்குப் போய் 5 நாள் சாவகாசமாய் இருந்துவிட்டு வரலாம் என்று கருதி இன்னும் இரண்டு நாள் லீவு கேட்கிறேன்.

*டேவிஸ்:* என்ன பண்டிகை?

*ராமானுஜம் :* தீபாவளிப் பண்டிகை

*டேவிஸ்:* தீபாவளி என்றால் அது ஒரு பண்டிகையா?

*ராமானுஜம் :* ஆம்

*டேவிஸ்:* அதற்காக லீவு எதற்கு?

*ராமானுஜம் :* பண்டிகை கொண்டாடுவதற்கு.

*டேவிஸ்:* எப்படிக் கொண்டாடுவது?

*ராமானுஜம் :* அதிகாலையில் எண்ணெய் தேய்த்து முழுகி புதிய ஆடை அணிந்து பலகாரம் சாப்பிட்டு பட்டாசு சுடுவது.





*டேவிஸ்:* குளித்து முழுகி புதிய உடை அணிந்து பட்டாசு சுடுவது ஒரு பண்டிகையா? இதற்காக நீ ஊருக்கு போக வேண்டுமா அதை அனுசரித்து சனி, ஞாயிறு வருவது போதாமல் மேற்கொண்டு இரண்டுநாள் தேவையா? இதென்னப்பா நாட்களைக் கொலை செய்யும் பண்டிகையாக இருக்கிறதே. லீவுக்கு கேள்வி கேட்பாடு இல்லையா

வாரத்துக்கு..............2............நாள்..........சனி, ஞாயிறு லீவு, வருடத்தில் 2 மாதம் வெய்யில் கால லீவு, வருடத்தில் 15 நாள் ஜனவரி லீவு, பிறகு காஷுவல் லீவு, இவைபோன்று என்னென்னமோ லீவு இந்த 2,3 மாதத்தில் பல லீவுகள் போதாக்குறைக்கு நாணயமாற்று லீவு, இப்படியே நாட்கள் பாழாகின்றன. நமக்குப் பிடிக்கும் நேரமோ ஒரு நாளைக்கு 5-மணி நேரம்தான் தேறுகிறது. அப்படித் தேறும் நாட்களில் இப்படிக் கணக்குவழக்கு இல்லாமல் நாட்கள் பாழாகின்றன. அன்னிய ஆட்சி போய் சுய ஆட்சி வந்து கூடவா இந்தத் தொல்லை? நாட்களெல்லாம் இப்படி லீவு ஆகிவிட்டால் அப்புறம் படிப்புத்தான் எப்படி வரும்?

*ராமானுஜம் :* நீ என்னப்பா, தீபாவளி வருஷத்தில் ஒரு நாள் பண்டிகையாக வருகிறது. அதுகூட உனக்குப் பொறுக்கவில்லையா? மனிதனுக்கு ஓய்வு வேண்டாமா?

*டேவிஸ் :* வருஷத்து ஒரு நாளாக ஒவ்வொரு நாளும் தான் வருகிறது. அதற்காக எல்லா நாளும் லீவு விடுவதா? ஓய்வுக்கு என்ன குறை, சனி ஞாயிறு போதாதா?

*ராமானுஜம் :* சனி, ஞாயிறு நமக்குப் போதும். வீட்டிலே குடும்பத்துடன் கொண்டாட ஒரு ஓய்வு நாள் வேண்டாமோ? சனி ஞாயிறுகளில் வீட்டில் உள்ளவர்கட்கு ஓய்வு ஏது?

*டேவிஸ் :* என்ன ஓய்வோ. என்ன கொண்டாட்டமோ எனக்கு ஒன்றும் புரியவில்லை இந்தப் பண்டிகைகளின் பேரால் வேலை நாட்கள் பாழாகின்றன.

*ராமானுஜம் :* நீ என்ன கருப்புச் சட்டைக்காரன் போல் தோன்றுகிறது. பண்டிகைகளை இப்படி வெறுக்கிறாயே.

*டேவிஸ்:* கருப்புச்சட்டை இல்லை. ஒரு இழவும் இல்லை. என்ன பண்டிகை இது? நாசமாய்ப் போன பண்டிகைகள். இப்படி மாதா மாதம் வந்து உயிரை வாங்குகின்றனவே.

*ராமானுஜம் :* அப்படிச் சொல்லாதே, பண்டிகைகள் எல்லாம் மத சம்பந்தமானவைகள், கடவுள் சம்பந்தமானவைகள், நாம் மதத்தைச் சார்ந்தவர்களாகவும் கடவுள் நம்பிக்கை உடையவர்களாகவும் இருந்தால் இந்த மாதிரி பண்டிகைகளைக் குறைகூறக் கூடாது. மனிதனுக்கு மதமும் கடவுளுந்தான் முக்கியமே ஒழிய இந்தக் கல்லூரிப் படிப்பு என்பதெல்லாம் மதத்தை சரிவர பின்பற்றி கடவுளை சரிவர அறிந்து பக்தி செய்யத்தான். ஆதலால் இப்படி எல்லாம் பேசாதே.

*டேவிஸ்:* என்னப்பா பூச்சாண்டி காட்டுகிறாய்? பண்டிகை எதற்கு என்றால் லீவுக்கு என்கிறாய், லீவுஎதற்கு என்றால் ஓய்வுக்கு என்கிறாய். சனி, ஞாயிறு லீவுபோதாதா என்றால் குடும்பத்தோடு ஓய்வுபெறத்தான் என்கிறாய். படிப்புக் கெட்டுவிடுகிறதே என்றால் மதத்துக்காகவும் கடவுளுக்காகவும் பண்டிகை கொண்டாடுவதாகச் சொல்லிக் கொண்டு இதைத் தவறு என்று சொன்னால் என்னைக் கருப்புச் சட்டைக்காரன் என்கிறாய். முடிவாக "படிப்பைவிட மதம் கடவுள் தான் பெரிது அதற்கு ஆகத்தான் படிக்கிறது" என்கிறாய் இது என்ன சமாதானம்? மேலும் ஒரு மனிதன் பிறக்கும் போதே மதம் அவன் கூடவே பிறக்கிறது. கடவுளும் ஒரு மனிதன் பிறப்பதற்கு முன்பு இருந்தே அவன் கூடவே இருந்து அவன் சாகும்வரை அவனை நடத்துகிறது. இந்த இரண்டு கெட்டியான சங்கதிக்கு ஒரு மனிதன் படிக்க வேண்டியது எதற்கு? அதுவும் காலேஜில் படிக்க வேண்டியது எதற்கு அப்படியானால் காலேஜிலே படிக்காதவர்களுக்கெல்லாம் மதம் கடவுள் அறிவும் பக்தியும் இல்லை என்றும், வராது என்றுமா சொல்லுகிறாய்?

*ராமானுஜம் :* நீ கருப்புச் சட்டைக்காரன் தான் சந்தேகமில்லை உன்னோடு பேசிப் பயனில்லை.

*டேவிஸ்:* கோபித்துக் கொள்ளாதே உன் பண்டிகையை அறியவேண்டுமென்றுதான் கேட்டேன் சங்கதி எங்கேயோ போய் விட்டதே! தீபாவளி என்ன பண்டிகை? எதற்காகக் கொண்டாடுவது? மதத்தை எப்படி அறிந்திருக்கிறாய்? அதில் கடவுள் பக்தி எப்படி ஏற்படுகிறது? சொல் பார்ப்போம்.

*ராமானுஜம் :* அப்படிக் கேள் சொல்கிறேன்.

தீபாவளி என்பது. உலகத்துக்கு கேடு விளைவிக்க ஒரு அசுரன். கடவுளால் கொல்லப்பட்ட நாளை மக்கள் கொண்டாடுவதாகும். அதை நீயும் கொண்டாடலாம். இப்பொழுது வெள்ளையன் ஒழிந்தநாளை நாம் சுதந்திர நாளாகக் கொண்டாட வில்லையா? அதுபோல



*டேவிஸ்:* அப்படியா? அந்த அசுரன்யார்? அவன் எப்படி உலகுக்குக் கேடு செய்தான் அந்தக் காலத்தில் அணுகுண்டு இருந்திருக்காதே. இந்தக் காலத்தில் அணுகுண்டு வைத்திருப்பவனையும் இன்னும் மக்கள் சமுதாயத்துக்கு என்னென்னவோ கேடு செய்கிறவர்களையும் பற்றி நாம் ஒன்றுமே பேசுவதில்லை. அப்படியிருக்க அந்த அசுரன் யார்? அவனென்ன கேடு செய்தான்.

*ராமானுஜம் :* அந்த அசுரன் பெயர் நரகாசூரன். அவன் பூமியிலிருந்து பிறந்தவன். அவன் தகப்பன் மகாவிஷ்ணு. அவன் தேவர்களுக்குத் தொல்லைக் கொடுத்து தேவர்களின் பெண்களுக்கும் தொல்லைக்கொடுத்தான். அதனால் மகாவிஷ்ணுவும் அவர் மனைவியும் சேர்ந்து அவனைக் கொன்று விட்டார்கள். இனி எவரும் தேவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதை மக்களுக்கு ஞாபகப்படுத்துவதற்காக அவன் செத்த நாளைக் கொண்டாடுவது தெரிந்ததா? இது தான் தீபாவளித்தத்துவம்.

*டேவிஸ்:* தெரிந்தது. ஆனால் அதை விளங்கிக்கொள்ள வேண்டுமென்று என் மனம் ஆசைப்படுகின்றது. அதாவது அவன் மகாவிஷ்ணுவுக்கும் பூமிக்கும் எப்படிப்பிறக்க முடியும்? பூமியானது மண், கல் உருவத்தில் இருந்ததே மகாவிஷ்ணுக்கு பூமியுடன் எப்படி கலவி செய்ய முடிந்தது? பூமி எப்படி கர்ப்பம் தரிக்கும்? அதற்கு எப்படி பிள்ளை பிறக்கும்? எனக்குப் புரியவில்லையே?

*ராமானுஜம் :* அட பயித்தியக்காரனே, மகாவிஷ்ணு நேராகவா போய்க் கலவி செய்வார்? அதற்கு அவருக்கு மனைவிகள் இல்லையா? ஆதலால் அவர் நேராகக் கலவிசெய்யவில்லை. மகாவிஷ்ணு பன்றி உருவம் எடுத்தார்.

*டேவிஸ்:* பொறு,பொறு இங்கே கொஞ்சம் விளக்கம் தேவை. மகாவிஷ்ணு ஏன் பன்றி உருவம் ஏன் எடுத்தார்?

*ராமானுஜம் :* அதுவா சரி சொல்கிறேன் கேள். இரண்யாட்சதன் என்று ஒரு இராட்சதன் பூமியை பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு கடலுக்குள் போய் ஒளிந்து கொண்டான்

*டேவிஸ்:* பொறு, பொறு, ஓடாதே, இங்கே எனக்கு ஒரு மயக்கம்

*ராமானுஜம் :* இதிலென்னப்பா மயக்கம்? நான்தான் தெளிவாகச் சொல்லுகிறேனே.

பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு சமுத்திரத்துக்குள் ஓடி ஒளிந்துகொண்டான் என்று

*டேவிஸ் :* சரி. அது அர்த்தமாச்சுது.

*ராமானுஜம் :* பின்னை எது அருத்தமாகவில்லை சும்மா தொல்லைக் கொடுக்கிறாயே.

*டேவிஸ் :* தொல்லை ஒன்றுமில்லை. உன் சங்கதிதான். என் மூளைக்குத் தொல்லை கொடுக்கிறது அதாவது ஒரு இராட்சதன் அப்படியின்னா என்ன? அது கிடக்கட்டும். அவன் பெயர் இரண்யாட்சதன் அதுவும் போகட்டும். அவன் கதையை அப்புறம் கேட்போம். அந்த இரண்யாட்சதன் பூமியை எப்படிச் சுருட்டினான். பூமிதான் பந்து போல இருக்கிறதே? அவன் அதை சுருட்டுவதானால்! ஒரு சமயம் உருட்ட முடியுமே தவிர சுருட்ட முடியாதே? அதுவும் போகட்டும் சுருட்டினான் என்கிறாய், சுருட்டினான் என்றே வைத்துக் கொள்வோம்.

சுருட்டினானே அவன் சுருட்டிக்கொண்டு ஓடினானே எதன்மேல் நடந்து ஓடினான்? ஆகாயத்தில் பறந்துகொண்டே சுருட்டியிருக்கலாம். ஆகாயத்தில் பறந்து கொண்டே ஓடியிருக்கலாம். கருடன் மகாவிஷ்ணுவையும் அவர் பெண்டாட்டியும் தூக்கிக் கொண்டு பறப்பது போல் பறந்திருக்கலாம்.

ஆனால் அவன் சமுத்திரத்துக்குள் ஒளிந்துகொண்டான் என்கிறாயே, அந்த சமுத்திரம் எதன்மேல் இருந்தது. பூமியின்மேல் இல்லாமல் அதுவும் ஆகாயத்தில் தொங்கிக் கொண்டோ அல்லது பறந்து கொண்டோ இருந்தது என்றால் சமுத்திரம் தண்ணீர் ஆயிற்றே அது ஒழுகிப்போய் இருக்காதா; அப்போது அடியில் ஒளிந்து கொண்டிருப்பவன் தொப்பென்று கீழே பூமியுடன் விழுந்திருக்க மாட்டானா, அல்லது அதுவேறு உலகமா நமக்கு ஒன்றும் புரியவே இல்லையே. இதை எனக்கு புரிய வைக்க வேண்டும். நானும் நீயும் பீ.ஏ 2-வது வருஷம் பூகோளம், வானநூல், சைன்ஸ் படித்தவர்கள். ஆதலால் இந்த சந்தேகம் வருகிறது. நாம் படிக்காத மடையர்களாய் இருந்தால் குற்றமில்லை; சற்று விளங்கச்சொல் பார்ப்போம்.

*ராமானுஜம் :* இதெல்லாம் பெரியோர்கள் சொன்ன விஷயம் சாஸ்திரங்களில் உள்ள விஷயம், மத தத்துவம், ஆதலால் இவைகளை இப்படியெல்லாம் கேட்கக் கூடாது. நாஸ்திகர்கள் தான் இப்படிக் கேட்பார்கள். கருப்புச்சட்டைக் காரர்கள் தான் இப்படிக் கேட்பார்கள்.





இத்தனை ஆயிரம் காங்கிரசுக்காரர்கள் இருக்கிறார்களே ஒரு ஆள் இப்படிக் கேட்பாரா. இந்து மகாசபையில் ஒரு ஆள் இப்படிக் கேட்பாரா, சோஷியலிஸ்ட்களில் ஒரு ஆள் இப்படிக் கேட்பார்களா; இந்திய கம்யூனிஸ்ட்களில் ஒரு ஆள் இப்படிக் கேட்பாரா; நீ தான் இப்படிக் கேட்கிறாய். நீ கருப்புச்சட்டைக்காரன் தான் சந்தேகமில்லை.

*டேவிஸ்:* நீ என்னப்பா இப்படி பேசறே. பி,ஏ படிக்கிறவனாகத் தெரியவில்லையே. பூமிக்குப் பிறந்தான் என்கிறாய் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு போனான் என்கிறாய். எப்படிப்பிறந்தான்; எப்படித் தூக்கிக் கொண்டு எப்படி போனான், என்றால் கோபித்துக் கொள்கிறாய். இந்தக் கதையைப் பண்டிகையாக வைத்து கோடிக்கணக்கான மக்கள் கொண்டாடுகிறார்கள் என்கிறாய். சர்க்கார் இதற்கு லீவு விடுகிறது; பல லட்சம் பிள்ளைகள் அன்று படிப்பதைவிட்டு தெரு சுற்றுகிறதுகள். இவ்வளவு பெரிய சங்கதியைக் கேட்டால் என்னை கருப்புச்சட்டை என்கிறாய்.

கருப்புச் சட்டை போடாதவனுக்கு புத்தியே இருக்கக் கூடாதா? புத்தி கூடாதா? புத்தி கருப்புச்சட்டைக்குத்தான் சொந்தமா? சரி. அதிருக்கட்டும் அப்புறம் அவன் ஓடிப்போய் சமுத்திரத்தில் ஒளிந்து கொண்டான், அப்புறம்?

*ராமானுஜம் :* ஒளிந்து கொண்டதும் பூமியில் இருந்தவர்களெல்லாம் போய் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார்கள்.

*டேவிஸ்:* இரு இரு பூமியைச் சுருட்டின போது பூமியில் இருந்தவர்கள் ஓடி விட்டார்களா? நோட்டிஸ் கொடுத்து விட்டுத்தான் சுருட்டினானோ?

*ராமானுஜம் :*நீ என்னப்பா சுத்த அதிகப் பிரசங்கியாக இருக்கிறே. ஓடிப்போய் முறையிட்டார்கள் என்றால் “எப்படிப் போனார்கள்” வெங்காயம் வீசை என்ன விலை, கருவாடும், கத்தறிக்காயும் குழம்புக்கு நல்லாயிருக்குமோ? என்பது போன்ற அதிகப் பிரசங்கித்தனமான கேள்விகளை முட்டாள் தனமாகக் கேட்கிறாயா?

*டேவிஸ்:* இல்லை, இல்லை கோபித்துக் கொள்ளாதே, சரி, சொல்லித் தொலை, முறையிட்டார்கள் அப்புறம்?

*ராமானுஜம் :* முறையிட்டார்கள். அந்த முறையீட்டுக்கு இரங்கி பகவான் மகாவிஷ்ணு உடனே புறப்பட்டார். சமுத்திரத்தினிடம் வந்தார். பார்த்தார் சுற்றி; எடுத்தார் பன்றி அவதாரம்; குதித்தார் தண்ணீரில்; பாய்ந்தார் நிலத்துக்கு. கண்டார் பூமியை தன் கொம்பில்

அதைக்குத்தி எடுத்துக் கொண்டு வந்து விரித்தார். பூமிப் பாயை ; புரிஞ்சுதா?

டேவிஸ்: புரியாட்டா கோபித்துக் கொள்கிறாய். அதிகப் பிரசங்கி என்கிறாய் சரி புரிந்தது. விரித்தார் பூமியை பிறகு என்ன நடந்தது?

ராமானுஜம் : பிறகா, பூமியை விரித்தவுடன் அந்த பூமிக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. ஒரு குஷால் உண்டாயிற்று பூமி அந்தப் பன்றியைப் பார்த்தது; அந்தப் பன்றி இந்தப் பூமியைப் பார்த்தது. அந்தச் சமயம் பார்த்து மன்மதன் இரண்டுபேரையும் கலவி புரியச் செய்து விட்டான். அப்புறம் சொல்ல வேண்டுமா, கலந்தார்கள் பிறந்தது பிள்ளை.

டேவிஸ்: சரி இங்கே என் சொந்த சங்கதி கேட்கிறேன்; கோவிச்சுக்காதே

ராமானுஜம் : சரி கேள்.

டேவிஸ்: வராகம் என்பது பன்றி அது ஒரு மிருகரூபம் சரிதானா?

ராமானுஜம் : சரி

டேவிஸ்: பூமி கல் மண் உருவம் சரிதானா?

ராமானுஜம் : சரி.

டேவிஸ் : இது இரண்டும் எப்படி கலவிபுரியும்? எப்படிக் கருத்தரிக்கும்?

ராமானுஜம் : பாத்தியா பாத்தியா இதுதான் போக்கிரித்தனமான கேள்வி என்பது கடவுள் பார்த்து எப்படி வேண்டுமானாலும் செய்யலாமல்லவா?

டேவிஸ்: என்னப்பா இராமானுஜம் பாத்தியா பாத்தியா என்று சாயபுமாதிரி பாத்தியா கொடுக்கிறே. இது பெரிய ஒருசயன்ஸ். செக்சுவல் சையன்சு சங்கதி. இதைக்கேட்டால் போக்கிரித்தனமான கேள்வி என்கிறாய். சரி. இதைப் பற்றி பிரின்ஸ்பாலைக் கேட்கலாம். அப்புறம் அந்தப் பிள்ளை என்ன ஆச்சுது?

ராமானுஜம் : அந்தப் பிள்ளைதான் நரகாசுரன்



டேவிஸ்: இந்தப்பெயர் அதற்கு யார் இட்டார்கள், தாய் தந்தையர்களா?

ராமானுஜம் : யாரோ அன்னக்காவடிகள் இட்டார்கள்? அதைப்பற்றி என்ன பிரமாதமாய் கேட்கிறாய். எனக்கு அவசரம் நான் போக வேண்டும் என்னை விடு.

டேவிஸ்: சரி போகலாம் சீக்கிரம் முடி அப்புறம்?

ராமானுஜம் : அந்த நரகாசூரன் தேவர்களுக்குத் தொல்லைக் கொடுத்தான். அவனை மகாவிஷ்ணு கொன்றார்.

டேவிஸ்: அடபாவி. கடவுளுக்குப் பிறந்தவனா தேவர்களுக்குத் தொல்லைக் கொடுத்தான்? அப்படியென்றால் தேவர்கள் என்ன அவ்வளவு அயோக்கியர்களா?

ராமானுஜம் : இல்லேப்பா. இந்த நரகாசூரனின் பொல்லாத வேளை தேவர்கள் கிட்டே இவன் வாலாட்டினால் அவர்கள் சும்மா விட்டு விடுவார்களா?

டேவிஸ்: அதற்கு ஆக தகப்பன் மகனுக்கு புத்திசொல்லாமல் ஒரே அடியாகக் கொன்று விடுவதா?

ராமானுஜம் : அது அவர் இஷ்டம் அதை கேட்க நாம் யார்?

“தேவரனையர்கயவர் அவருந்தான் மேவன செய்தொழுகலான்” என்று நாயனார் சொல்லி இருக்கிறார். ஆதலால் நாம் அது ஏன்? இது ஏன்? என்று கேள்வி கேட்கலாமா?

டேவிஸ்: சரி கொன்றார் அதற்கும் தீபாவளிக்கும் என்ன சம்பந்தம்.

ராமானுஜம் : அதைக் கொண்டாட வேண்டிய அவசியம் ஏன் என்றால் இனிமேல் எவனும் தேவர்களுக்குத் தொல்லைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக அதை ஞாபகத்தில் வைப்பதற்கு அதை நினைவூட்டுவதற்கு நாம் அடிக்கடி கொண்டாட வேண்டியது என்பதுதான்.

டேவிஸ்: தேவர்கள் எங்கிருக்கிறார்கள்?

ராமானுஜம் : வான தேவர்கள் வானத்தில் மேல் உலகத்தில் இருக்கிறார்கள். பூதேவர்கள் இந்தப் பூமியிலே இருக்கிறார்கள்.

*டேவிஸ்:* இந்தப் பூமியில் இருக்கும் தேவர்கள் யார்?

*ராமானுஜம்* : அட முட்டாள் அது கூடவா தெரியாது? அதுதான் பிராமணர்கள். பிராமணர்கள் என்றாலே பூதேவர்கள் தானே? அகராதியைப்பார்

*டேவிஸ்* : பிராமணர்கள் என்பவர்கள் என்ன வகுப்பு?

*ராமானுஜம்* : என்ன வகுப்பா நாங்கள் தான்.

*டேவிஸ்:* நீங்கள் என்றால் நீ அய்யங்கார் அய்யங்கார் தாசனா?

*ராமானுஜம்* : நாங்கள் மாத்திரம் அல்ல அப்பா நாங்களும் அய்யர், ஆச்சாரியார். சாஸ்திரி, சர்மா, தீட்சிதர் முதலியவர்கள்.

*டேவிஸ்:* அப்படியெனில் பார்ப்பனர்கள் யாவருமே பூதேவர்கள் என்கிறாய்

*ராமானுஜம்* : ஆமாம், ஆமாம், கல்லாட்டமா ஆமாம்.

*டேவிஸ்:* சரி, தொலைந்து போகட்டும், நீங்கள் தேவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். உங்களுக்குத் தொல்லை கொடுக்க அசுரர், ராட்சதர் ஒருவர் இந்த உலகத்தில் இல்லையோ? இங்கிருப்பவர்களைப் பயப்படுத்த தீபாவளி கொண்டாட வேண்டுமா?

*ராமானுஜம்* : இங்கேயா அசுரா, ராட்சதர் இல்லை என்கிறாய் இந்தக் கருப்புச்சட்டைக்காரர்கள். சு.மக்கள் திராவிடர் கழகத்தார்கள் என்கிறார்களே அவர்களெல்லாம் வேறு யார்? பிராமணர்களைப் பார்த்து பொறாமைப்படுகிறவர்கள் குறை கூறுபவர்கள்; அவர்களைப் போலவே வாழ வேண்டுமென்பவர்கள் வேத சாஸ்திர புராண இதிகாசங்களைப் பகுத்தறிவால் ஆராய்ச்சி செய்பவர்கள் முதலிய இவர்கள் எல்லோரும் இராக்கதப்பதர்கள், இரக்கமே இல்லாத அரக்கர்கள் தாம், தெரிந்ததா, அவர்களுக்கு பயம் உண்டாவதற்காக தேவர்களுக்கு இடையூறு செய்தால் நாசமாய்ப் போய் விடுவாய் என்று அறிவுறுத்துவதற்கு ஆகத்தான் தீபாவளி கொண்டாடுவதாகும். இதுதான் இரகசியம். மற்ற கதை எப்படி இருந்தால் என்ன.

*டேவிஸ் :* அப்படியா நீங்கள் 100க்கு 3 பேர். நீங்கள் அல்லாதவர்கள் 100க்கு 97பேர். இப்படி எத்தனை நாளைக்கு மிரட்ட முடியும்.



*ராமானுஜம்* : அதைப் பற்றி கவலைப்படாதே, காங்கிரஸ் ஸ்தாபனம் இருக்கிறது. அந்தத் தொண்ணூற்றேழு பேர்களில் ஒரு பகுதி விபீடணர்களாக அனுமார்களாக இருந்து பிராமணத் தொண்டாற்றவும் எதிரிகளை ஒழிக்கவும் பயன்படுத்துவதற்கு மற்றும் பண்டிதர் கூட்டம். படித்துவிட்டு உத்யோகத்துக்கு காத்துக் கிடக்கும் கூட்டம். கோவில் மடம் தர்ம ஸ்தாபனத்தில் இருக்கும் கூட்டம் புத்தகக் கடைக்கூட்டம் பூசாரிக்கூட்டம் பிரபுக்கூட்டம் பாதிரிக்கூட்டம், உயர்பதவி வகிக்கும் உத்தியோகஸ்தர் கூட்டம், தாசிக்கூட்டம், சினிமாக் கூட்டம், நாடகப் பிழைப்புக் கூட்டம், கலை வித்வான்கள் அரசியல் பிழைப்புக்காரக் கூட்டம், தேசபக்தர்கள் தியாகிகள் கூட்டம் இப்படியாக இடறி விழுந்தால் அவர்கள் மீது விழும்படி சர்வம் பிராமண அடிமையாம் என்பது போல் இருக்கும்போது 100க்கு 3, 100க்கு 97 என்று கணக்கு முட்டாள்தனமான கணக்கு ஆகும்.

*டேவிஸ்:* ஓஹோ, அப்படியா; சரி,சரி, தீபாவளி என்பதன் தத்துவமும் இரகசியமும் தெரிந்துகொண்டேன். நன்றி வணக்கம்.

*ராமானுஜம்* : நமஸ்தே, ஜெய் ஹிந்த்.